உ

கடவுள் துணை.

சுப்பிரமணியர் திருவிளையாடல்

என்னும்

ஸ்ரீ வள்ளி திருமணம்.

413/1930

OFFICE OF THE REGISTRAR
29 OCT 1930
MADRAS

காஞ்சிபுரம். சுப்புராய முதலியார் பாடியதை,

உபாத்தியாயர், ராயவேலூர் ரங்கநாத முதலியாரவர்களால்

எழுதப்பட்டு,

நெ. 45, அண்ணாப் பிள்ளை தெருவு,

K. கண்ணப்ப ஸ்ரீ சகல சுதந்திரத்துடன் பெற்றுக்கொண்டு

சென்னை-சூளை, ஸ்ரீ பாரதி அச்சுக்கூடத்தில்,

டைடில்பேஜ் மாத்திரம் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்தர் காபிரைட்.] 1930. [இதன் விலை அணா 6.

உ

ஸ்ரீ சிவசுப்பிரமணியக்கடவுள்

வள்ளி திருமணம்.

விநாயகர் தரு.

(கஜமுகதேவா என்ற வர்னமெட்டு)

மூஷிகவாகனா மோதக போஜனா
மாசிலாது வாரணா வந்தருள்செய் பூரணா
வல்லபைதன் னேயனே வாதுகளேன் தூயனே
அல்லலணுகாமலே யகளுமையாள் சேயனே
மீனலோசனிமகிழ் மேதையனே வாக்கருள்
வானவர்கள் போற்றிட வள்ளிகதை யேற்றிட
விக்கினமகற்றியேவி முதிதனுக்கிட நீயே
இக்கணமருள்புரி யேழையெனையாதரி (மூ)

சரஸ்வதி தரு.

(ஆ சகிகாள் என்ற வர்னமெட்டு.)

அம்பா கார்த்தருள்வாய்
அம்பா கார்த்தருள்வாய்

கருக்கலடியி லமர்ந்திலகும்
கஞ்சுமக்ஷேத்திர காவலியே அம்பா

சித்தமிலாதுந்தன் சேயனைகண்பார்ப்பாய்
குறைதீர்ப்பாய் கல்விசேர்ப்பாய்
சிறந்தஞானப்பாலே வளர்ப்பாய்
சாற்றும்பீஜாக்ஷரி, சாமுண்டி வீரி
தோற்றும் பொருள்களின் துலங்குமாரி
வேதபரம்பரி விமலியே நீலி
க்ருபாலீதிருசூலி வேண்டினோர் கனுகூலி
மாதவன் சோதரி மகிழூம்சம்மாரி
ஏதன்றியெம்மை யென்னுளுமன்னைப்போல்
சர்ப்பபாரணி சந்திரகேசரி
சிவசங்கரி நிரந்தரி துரந்தரி

பொல்லாசத் திருக்களின்வைரி
ஒப்பிலாப்பிரணவ ஓங்காரீ ரீங்காரீ
சப்பருயன் போற்றும் சுந்தரியே (அம்பா)

சபைவணக்கம்-தரு.

(வந்தனம் தந்தேன் என்ற வர்னமெட்டு.)

சபையின் சாதுக்காள்-மிக
சருணம் செய்தோம் யாம்
வேதமுணரும் வேதியரேநின்
பாதம்பணிந்தோம் பண்புடனே
பாலரைகார்ப்பீரே சீலர்கள் வாழ்கவே
உமதடிகதியென பலதரை முறையிட
தமதருள் யெதுவோ யாமரியோம்

சீன்—1. தர்பார்.

நம்பிராஜன் வருதல்.

நம்பிராஜன் தரு.

(கனுகொண்டினி என்ற வர்னமெட்டு.)

காருமெந்தனே கார்த்தருள் வேல்முருகா
திருங்குரையையா தேவர்போற்றுமையா
தாளடி பணிந்தேன் தாஸனீங் கடைந்தேன்
எந்தன்செங்கோலதும்
இனிய நகரமும்
உந்தனருளினல் என்றுமோங்கி யின்று

நம்பிராஜன் வசனம்.

மந்திரிகாள் நான் இப்போது பகவானை தியானித்தாய்விட்டது இனி தேசவள்ப்பத்தை விசாரிக்க கருதியிருக்கின்றேன் தக்கவிடை பகர் வீர்கள்.

மந்திரி வசனம்.

அவ்வாரே பதிலுரைக்கின்றேம்.

தமிழ்நாடு

நம்பிராஜன் தரு.

(பால் அபிஷேகம் பழனி என்ற வர்னமெட்டு.)

மாநிலந்தன்னில் மாதமும்மாரியும்
மகிழுடன்பெய்யுதா அரிவிப்பீர் மந்திரி

மந்திரி தரு.

மானிலந்தன்னில் மாரியும்பெய்து
மகிழுடன்வாழ்ந்து வருகின்றாரரசே

நம்பிராஜன் தரு.

ஆலயப்பூஜைகள் அனுதினம்தவறுமல்
அன்பாய்நடக்கின்றதா மந்திரி

மந்திரி தரு.

காலந்தவறுமல் ஆலயத்தில்
சீலமாய்பூஜை நடந்தேருதே

நம்பிராஜன் தரு.

சரி சிற்றரசர் பகுதியை செலுத்துகுராறு

மந்திரி தரு.

சரிவர கப்பணம் கட்டுகின்றாரே

நம்பிராஜன் வசனம்.

ஆனல் மெத்த சந்தோஷமடைந்தேன் மந்திரிகாள் என் புத்திரர் களை அதி துரிதமாய் அழைத்தோடிவருவாய்.

வேடர் தரு.

அடிமலரிணைப்பணிந்தோம் தந்தையே
அடிமலரிணைப்பணிந்தோம்

அன்புட உமதடி தென்புடநாமின்றே
துடிதுடிதுடிப்புடன் தூதரைவிடுத்து
தீவிரமழைத்ததேன் தெரிவிப்பீர் தந்தையே

வேடர் வசனம்.

பிதா நமஸ்கரிக்கின்றோம் எங்களை யாதுகாரணமாக அழைத்தீர்கள்.

நம்பிராஜன் வசனம்.

ஹே புத்திரசிகாமணிகளே கல்யாண் அமருவீர்கள் யான் உமக்கு ஏற்பட்ட தொழிலைச்செய்ய உத்தேசித்திருக்கின்றேன் யான் கேழ்ப்ப தற்கு பதிலுரைக்க உங்கள் சித்தம் யாது தெரிவிப்பீர்கள்.

வேடர் வசனம்.

தங்களது திருவாக்கினின்று எப்பொழுது திவ்விய வார்த்தை வரப்போகிறதென்று எதிர்ப்பார்த்திருந்தோம் இப்பொழுது பதிலுரைக்க சித்தமாயிருக்கின்றோம்.

நம்பிராஜன் தரு.

(நடந்தது என்னசொல்லுமம்மா என்ற வர்னமெட்டு)

மதிமுகபாலர்களே இங்கு
வழுத்துவேன் சீலர்களே (மதி)
நதிகுலம் நிரம்பிட விதித்தவருதுமே
நாட்டில்மழை பொழிந்து

நன்னகர் செழித்ததா
பதியிலேதேனுமொரு
பயிரிடவே நினைந்தேன்
பாலர்களே சொல்வீர் பண்புடனே (மதி)

நம்பிராஜன் வசனம்.

புத்திரசிகாமணிகாள் நமது நாட்டில் மாதமும்மாரி நீதமாய் பொழி கின்றதா ? அதினால் நகர் செழிப்புற்று பயிரிட தகுதியுற்றிருக்கின்றதா உரைப்பீர்கள்.

வேடர் வசனம்.

பிதா மனுஸ்பிருதி பிரகாரம் மழை வருஷித்து சகலவிடம் தடா கங்களெல்லாம் நிறைந்து பயிரிடுவதற்கு யோக்கியதையாயிருக்கின்றது.

நம்பிராஜன் தரு.

ஜாதிமுறை மைந்தர்களே நீதியுடனே செய்து
சண்முகனைத் தொழவே தருவில் மலர்கொய்து
ஜோதி மலரடியிர் சொரிந்து காங்குவித்து
தோத்திரம் செய்வதெடுத்த
துரைத்திடுவாய் விரிந்து (மதி)

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்களே நம் இனத்தார்களெல்லாம் நம்குல தெய்வமாகிய ஆறுமுகக் கடவுளை பஞ்ச தருக்களால் மலரடியிர், சொரிந்து சிரமேற் கரங்குவித்து பக்தியுடன் பூஜித்து வருகின்றார்களா.

வேடர் வசனம்,

பிதா ஒவ்வொருவரும் அதிகாலையிலெழுந்து ஸ்நானம்செய்து நித்தியக்கடனை முடித்துக்கொண்டு குலதெய்வத்தையும் பூஜித்து யாதொரு குறைவின்றி வாழ்ந்து வருகின்றார்கள்.

நம்பிராஜன் வசனம்.

புத்ர சிகாமணிகாள் மிகவும் குதூகலமடைந்தேன் நல்லது யாரோ ஆசாரித்தின்கன் வருவதாக தெரிகின்றது விஜாரித்து வாருங்கள்.

வேடர் வசனம்.

அவ்விதமே பார்த்து வருகின்றோம்.

வேடர் வசனம்.

அடே நீயார் யிங்குற்ற விசேடம் யாது உரைசெய்.

குறவர் வசனம்.

நாங்கள் மலையிலிருந்து வந்திச்சு கிளங்கு வெட்டி யிந்த பள்ளத் துலே ஒரு குஞ்சு கிடந்துச்சு.

வேடர் வசனம்.

அடே குஞ்சு வென்றாலென்னடா.

குறவர் வசனம்.

அய்யா அது தாயொங்குஞ்சு அது மகாராஜாக்கு சொல்லன்னு வண்டா.

வேடர் வசனம்.

சரி வருகின்றோம் செல்லுங்கள்.

வேடர் வசனம்.

பிதா யேதோ குறவர்கள் கிழங்குவெட்டிய கிடங்கில் ஓர் பெண் மகவு இருப்பதாகவும் வந்து பார்க்கும்படி சொன்னார்கள்.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்களே ஆனல் சீக்கிரம் உங்கள் மாதாவை அழைத்து வாருங்கள்.

மோகினி வசனம்.

நாதா நமஸ்கரிக்கின்றேன் தாங்கள் அழைத்த காரணம் மைந்தர்களால் தெரிந்தேன் வருவீர்கள்.

நம்பிராஜன் வசனம்.

கண்மணி மோகினி இம்மகவையை பார்த்தனையா என்ன அழகு பச்சை நிறமுள்ள முகவஜிகரமும் பார்வைக்கிசைந்த வென்னிரமாயிருக்கின்றதே என்னல் அரிந்தவரையில் இக்குழவியை பற்றி வர்ணிக்கின்றேன் கவனிப்பாய்.

நம்பிராஜன் அகவல்.

மங்கையே கேளாய் மகிழுட னுரைப்பேன்
எங்கள் முன்னோர்கள் இயற்றிய தவமோ
கருவுருவாகி கானகந்தன்னில்
சிருகுதலையது ஜெனித்ததோ வறியேன்
கந்தனை சிந்தையில் கருதியேவாடி
தந்தருள் புத்திரி தர்ப்பார் லென்றடி
போற்றியே மாதவம்புரிந்த நர்பலன்மனம்
தேற்றிவா ழென்றரசன் சேய்குகனளித்தனல்
பங்கயன் மாதுமிப் பார்தனிலுதித்து
செங்கதிர் மேனியாள் செருக்குட னுதித்தாளோ
அல்லதுவருணி அயனவகன்றி
தொல்புவிமீதில் தோன்றினளோ தான்
கங்கையோன் காரிகை காசினிதனிலே
இங்கவதார மெடுத்தாளே வரியேன்
இப்பெரு மகிழ்ச்சியை இயம்பிடவொண்ணு
திப்பெரும் புதல்வியை யெடுத்தக மகிழ்வாய்.

நம்பிராஜன் வசனம்,

கண்மணி நமது முன்னோர்கள் செய்த நற்குரு வசமோ அல்லது நாம் புரிந்த தவப்பயனே நம்குல தெய்வமாகிய சுப்ரமணிய கடவுள் நம்மேல் நன்மதி கூர்ந்து நர்புதல்வியை அளித்தனர் நாம் இனி அகத்திற்கு ...கச் சென்று அக்குழந்தை வள்ளிக்கிழங்கு வெட்டிய பள்ளத்

தில் வள்ளி கொடியால் காப்பாற்றப்பட்டதால் வள்ளியென்னும் நாம தேயமிட்டு வளர்த்து சகல வித்தைகளையும் கற்பித்து பக்குவ திசை யடையும் வரை கன்னியாமாடத்தில் கன்னிகழியும் வரை விடுத்து வைப்போம்.

நம்பிராஜன் வசனம்.

மைந்தர்களே நமது அருமை புதல்வியை அழைத்து வருவீர்கள்.

மைந்தர் வசனம்.

என்ன சாரணத்திற்காக.

வேடர் வசனம்.

தந்தையே தங்கள் உத்திரவு பிரகாரம் அழைத்து வருகின்றோம்.

வேடர் வசனம்.

கல்யாண் தங்கா உன் தந்தை அழைத்துவர விடுத்தனர் வருவா யாக.

வள்ளீ வசனம்.

அண்ணமார்களே பிதாவாக்குக்கு எதிர்வாக்குண்டோ இதோ வரு கின்றேன்.

வள்ளிநாயகி வருதல்.

வள்ளி தரு.

(ஆ ஆ செங்கமலம் என்ற மெட்டு.

வந்தனம் தந்தேனே சபையோர்க்கு — வந்த
இங்கனம் வந்தனம் தந்தேனே
செந்தமிழ் கேற்ற சீருள்ள மாந்தார்
செல்வ ரனைவருக்கும்
கவிவானர்க்கும் மரையோருக்கும் — சிருவள்
பார்புகழ் இந்தியாவை பரிபாலிக்கும்
மகாராஜ ரவர்களுக்கும் நீதிதனக்கும்
செங்கோலுக்கும் சிருவருள் வந்தனம்
வித்வ சிரோண்மணி சித்ர கவி சுப்பருய்யன்
மகியனுக்கும்
வர்னமெட்டுக்கும் சொர்ண பாட்டுக்கும்
சிருவள் வந்தனம் தந்தேனே

வள்ளி வசனம்.

பிதா நமஸ்கரிக்கின்றேன் என்னை யாது காரணமாய் வரவழைத்தீர்.

நம்பிராஜன் வசனம்.

வத்ஸே வேங்கு கமுகு புன்னை மா பலா யென்று சொல்லும் சோலைக்கருகில் தினைவிரைத்து கதிர்முதிர்ந்து சடை விரித்து படையுடன் பல பக்ஷிகளும் வந்து தினையை அருந்தும் பக்குவமாதலால் இன்று முதல் சேடிகளுடன் பரண்மீதமர்ந்து தினைப்புனம் கார்ப்பாயாக.

வள்ளி வசனம்.

அவ்விதமாக கார்த்து வருகிறேன் நானழைக்கும் போதெல்லாம் தாங்களும் எனது அண்ணமார்களும் வந்து தயவுசெய்ய பிரார்த்திக்கின்றேன்.

நம்பிராஜன் வசனம்.

நாங்கள் அந்தபுரம் சென்று வருகின்றோம் ஜாக்கிரதையாக பக்ஷிகளை நாட ஒட்டாமல் காவல் புரிவாய்.

வள்ளி வசனம்.

அ ஆ இந்த வனத்திலிருக்கும் பக்ஷிகள் என்ன அழகாயிருக்கின்றது நாம் சிலது நேரம் வர்னிப்போம்.

வள்ளி தரு.

(இந்த நந்தவனத்தின் பெருமை என்ற மெட்டு.)

என்னுவென்று நான் சொல்லுவேன் இந்த
வனமான தினைபுனை வனத்தின் பெருமையை
ஏதுவென்று நான் சொல்லுவேன்

கடல்காக்கை கள்ளிகாக்கை
கண்சிவந்த நாரைகளும்
வக்காவும் கொக்காவும்
வால்நீண்ட பக்ஷிகளும்
பால குருவியுடன் பாப்பாற மைனாவும்

காடை கவுதாரிகளும் கல்பொருக்கி பக்ஷிகளும்
தூரத்தில் கூண்டுகட்டும் தூக்கணாங் குருவிகளும்
மூக்குகள் நீண்டிருக்கும் மீன்குத்தி பக்ஷிகளும்
புல்புல் குருவிகளும் புகழான யாள்காட்டி

மயில்களும் குயில்களும் மருவி விளையாடுவதும்
ஆட்ட புறாக்களும் அணி அணியாய் யாடுவதும்
பச்சை கிளிகளும் பஞ்சவர்ண கிளிகளும்
கூட்டமாய் கூடியது கொஞ்சி விளையாடுவதும்
என்னவென்று நான் சொல்லுவேன் இந்த
வனமான தினைபுன வனத்தின் பெருமையை
எதுவென்று நான் சொல்லுவேன்..

வள்ளி வசனம்.

இந்த வனத்தில் நம்மை காவல்புரிந்து ஆலோலம் ஓட்டும்படி நமது பிதா ஆக்கினையிட்டு இருக்கின்றாரல்லவா அதைப்போல் நாம் இந்த பரணையின்மீது அமர்ந்து ஆலோலம் ஓட்டிக்கொண்டிருப்போம்.

வள்ளி தரு.

(ஆ வனந்தனில் மானது ஓடுது என்ற வர்னமெட்டு.)
இந்த வனந்தனில் ஆலோலலதம் ஓட்ட
எந்தன் ஜாதிமுரையோ உந்தன் செயலோ
எந்தன் மதியோ

யீசனே கைலேவாசனே கைலேவாசனே வாசனே
அன்னம் போலேவரும் அருமை பக்ஷிகளின்
பெரும் கூட்டங்களைப் பார்வரும் நீட்டம்பார்
வெகு கூட்டம்பார்

யீசனே கைலேவாசனே கைலேவாசனே வாசனே
மாணிக்க கவுண்டாலே மாதுநான் விட்டாலும்
மாண்டு மடிந்திடுமே மனம் நோகுமே
யினம் சாகுமே

யீசனே கைலேவாசனே கைலேவாசனே வாசனே

வள்ளி வசனம்.

பார்த்தனையா காடை கவுதாரி மயில்குயில் அன்னப்பேடு வண்டினங்களுடன் இத்தினைக்கு வருகிறது அதை அதட்டியும் போகவில்லையே இதோ கவனெடுத்து யெரிகிறேன்.

வள்ளி தரு.

(எந்தனது திருநாடு என்ற வர்ணமெட்டு)

ஆலக்கிளி நீலக்கிளி ஆலோலம் ஆலோ
அந்தமுள்ள பக்ஷிகளும் ஆலோலம் ஆலோ
செகப்பு வர்ண கிளிகளா ஆலோலம் ஆலோ
சேர்ந்துமேயும் பூங்கிளிகள் ஆலோலம் ஆலோ
மஞ்சள் குருவிகளா ஆலோலம் ஆலோ
மந்தாரை பக்ஷிகளா ஆலோலம் ஆலோ
பச்சை வர்ண கிளிகளா ஆலோலம் ஆலோ
பரந்து மேயும் பூங்கிளிகாள் ஆலோலம் ஆலோ
காகங் கழுகுகளா ஆலோலம் ஆலோ
காட்டில் வாழும் பக்ஷிகளா ஆலோலம் ஆலோ
கோழிகளா கொக்குகளா ஆலோலம் ஆலோ
கோக்கிலமே அன்னங்களா ஆலோலம் ஆலோ
புள்ளினங்கள் குருவிகளா ஆலோலம் ஆலோ
புனத்தில் மேயும் பக்ஷிகளா ஆலோலம் ஆலோ

வள்ளி லரு,

ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
ஆலோலம் ஆலோலம் ஆலோலம் ஆலோலம்
அன்னங்களே தாராக்களே
இடவு சூழ் வண்டினமே
கன்னங் கருங்காகங்களே
காடை கவுதாரிகளே சோ சோ
மாட புறுக்களே மணிபுறு கோகிலமே
தேடக் கிடையாத குயில்
தினையில் விழுகுதடி
ஆடும் மயினினமே அறிவுள்ள மானினமே
ஜோடு பிரியாத வன்றல் தூக்கனமே சென்றிடுவாய்.

த ரு.

கைதனிலே கவனெடுத்து ஆலோலம் காரிகை நான்
காடை கவுதாரியின்மேல் ஆலோலம் கல்தொடுத்து
மெய்தனிலே நீவலவனர் ஆலோலம் பவமிருத்தி

மேன்மையுள்ள அன்னங்களை ஆலோலம் யேதுறத்தி
அன்றிலேயே கவனெடுத்தேன் ஆலோலம் ஓடுதுபார்
அன்னையே காணுது ஆலோலம் தேடுதுபார் ஹாய்
எண்டிசையோர் போற்றுமயில் ஆலோலம்
யேங்குது பார்
என்சகியே ஓட்டமது ஆலோலம் வாங்குதுபார்
ஹாய் ஹாய்

வள்ளி வசனம்.

நல்லது கவன் யெரிந்ததால் பக்ஷி ஜாதிகளெல்லாம் ஒன்றுட ரென்று சேருமல் பறந்து போய்விட்டது இனிவந்தால் கவண்டு கல்லால் யெரிலாம்.

நாரதர் தரு

(முத்திகெரி அரியாத என்ற வர்ணமெட்டு.)

ராமஜெயம் அரி ராமஜெயம் ஹரி
ராமஜெயம் அரி ராமஜெயம்
ராமஜெயம் அரி ராமஜெயம் ஹரி
ராமஜெயம் அரி ராமஜெயம்
மாமனை தேர்க்கஞ்சனையே கொன்ற
மாயவனே ஸ்ரீராமஜெயம்
வாமன ரூபா ராமஜெயம் ஸ்ரீ
வைகுண்ட வாசனே ராமஜெயம்
கோளவர்மனை நெய் வெண்ணையுண்டோனே
கோபாலனு நீ ஸ்ரீராமா
ஜெயம் ஞானமளித்தருள் ராமஜெயம்
திருநாயகரும் நீரே ராமஜெயம்.

நாரதர் வசனம்.

யானே பிரதிகாலத்தில் எழுந்து ஜெபதபக் காலக்கடனை முடித்துக்கொண்டு கரத்தினிடமாக வீணையை தாங்கி சகல சாஸ்திர நாமங்களை பஜித்துக்கொண்டு திரிலோகங்களாகிய கைலங்கிரி சத்தியலோகம் வைகுண்டம் இவைகளுக்குச் சென்று அவர் அவர்களுடைய ஆசீர்வாதமும் அனுக்கிரகமும் பெற்றுக்கொண்டு இந்த அமராபதிக்கு வந்தும் இன்று ஓர்வித கலசமும் கிடைக்கவில்லை இதைவிட்டு பூலோகத்திற்கு

வந்தும் ஒன்றும் காணேன் இதன் அருகில் ஓர் வனமானது காணப்படு கின்றது அருகில் சென்று கவனித்துப் பார்ப்போம்.

ஆ ஆ இதென்ன ஆச்சரியம் நாம் இதுகால பரியந்தம் அநேக இடங்களுக்கு சென்றிருக்கின்றோம் இந்த ரூபாலா வண்ணியமான மங் கையைப்போல் நாம் எங்கேயும் கண்டதில்லை சபாஷ் அந்த கீழுகாஜலக் கடவுளுக்கே தான் தகுதியானவள் ஆயினும் அருகில் சென்று விஜா ரிப்போம்.

நாரதர் கலித்துரை.

சுந்ரமிகுந்திடுங்காவனம் வன்னிலோர் கன்னிகையை
எந்தர மங்கையார் போலே யிங்குற்ற தோராரனங்கு
விந்தையுடன் பரன்மீதே கவண்கொண்ட யேந்தினையை
கந்தனுக்கே மாலைசூட்ட யென்னுவியும் கருதினதே.

வள்ளிநாயகி தினைபுனம்.

நாரதர் தரு.

(அம்பணி நீ வாதுசெய்தால் என்ற வர்ணமெட்டு.)

அம்மணி நீ என்னகரம் நண்ணயமாய்
என்னிடம் சொல் தாயே தாயே

வள்ளி தரு.

சரச மாயிங்கு வந்து
ஜாதிமுரை கேழ்ப்பதென்ன முனியே முனியே

நாரதர் தரு.

கானகத்தில் நீ தனியாய்
காவளிங்கு உற்றதென்ன தாயே தாயே

வள்ளி தரு.

ஞானமுனி யேத்தி ஞயே
காடியிங்கு கார்க்கும் வள்ளி நானே நானே

நாரதர் தரு.

தாயே விடை நீயே யுரைப்பாயே
மணமானதோ சொல் தாயே தாயே

வள்ளி தரு.

வாய்வதமோ டிங்குவந்து
வருந்தலாகுமோ நாரத முனியே முனியே

நாரதர் தரு.

கந்தனுக்கே உந்தனேயே வந்தேன்
மணமின்னு செய்ய தாயே தாயே

வள்ளி தரு.

எந்தன் முன்னே சுந்தரனே
விந்தைபேச வேண்டாமினி முனியே முனியே

நாரதர் தரு.

முருகன் வெகுதிரமையறி அறிவுடைய
திருவழகி தாயே சொல்வாயே

வள்ளி தரு.

முனிகளுக்கும் மதிவருமோ
இனி பிசையாதேகுடுவீர் முனியே முனியே

நாரதர் தரு.

எந்த விதமாகி லுனேக்
கந்தனுக்கே மாலே புனேவேனே முனிநானே

வள்ளி தரு.

தந்திரமும் மந்திரம் சுந்தரிமுன்
செல்லாது வீண் முனியே முனியே

வள்ளி வசனம்.

நாரத முனியே நீர் இவ்விதம் புகல்வது தகுதியன்று உம்முடைய சாமார்த்தியம் ஒன்றும் நடவாது செல்லும்

நாரதர் வசனம்,

அம்மணி நீ இவ்விதம் உரைப்பது சரியல்ல அந்த கழுகாஜல க்ஷேத்திரத்தில் குமரேசன் இருக்கின்றார் அன்னவரை மணருவாயாகில் உனக்கு மிகவும் புண்ணியம் கிடைக்கும் அம்மா யாதொன்றுக்கும் அம்மணி யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் அவரையே நம்பவேண்டி

வள்ளி வசனம்.

என்காணும் முனியே இவ்விடம் வந்து அடாத வார்த்தையெல்லாம் ஆடுகின்றீர் இந்த வனத்தினமாக. என் தமையன்மார்கள் இருக்கின்றார்கள் அவர்களை தருவிப்பேன் ஆகில் உம்மிட சிரசை இரண்டு துண்டாக செய்துவிடுவார் ஓடிப்போய்விடும் முனியே.

நாரதர் தரு.

(வீணாக எந்தனிடம் வாது செய்யலாமா என்ற வர்ணமெட்டு.)

என்னை தூஷித்தல் சரிதானோ நீதிதானோ

வள்ளி தரு.

என்னைவர்ப் புருவத்துவ தேனோ விதிதானோ

நாரதர் தரு.

சீனே சங்கரும்பே செந்தேனே சிரந்தமானே
கோனே விடைதருவாய் மாதா யென்னுடன் வாதா

வள்ளி தரு.

நீதாகமழு மலர்பாதா தும்புருமுனி
நாதா கரங்குவித்தேன் வாதா முனிநாதா

நாரதர் தரு.

பாரில் பரமனிந்த பன்னிருகை வேலவரை
பன்பாய் மணம்புரியம்மா புண்ணியமம்மா

வள்ளி தரு.

ஏனோ என்னுடன்வாது வீணாய்செய்குறீர்க்கு
வேண்டாம் வினவுவதைபாரீர் விட்டுப்போவீர்

நாரதர் தரு.

அய்ங்கரனுடன் பிரந்த சங்கரன்மைந்தன் சமர்த்தை
அளவிட யெந்தனலோ சொல்லப்போமோ

வள்ளி தரு.

வீரசூரனென்னு வீணாய் புகழலாகீர்
வேண்டாம் வினவுவதைபாரீர் விட்டுபோவீர்

நாரதர் வசனம்.

தாயே இப்பொழுது நானெவ்வளவு எடுத்துரைத்தும் கேளாத தரல் எவ்விதத்திலும் அக்கந்தனுக்கே மணமுடிப்பேன் இதுவே நிச்சயம்.

நாரதர் தரு.

(மருந்து உரைத்தவன் ஆர என்ற வர்ணமெட்டு.)

என்மொழியைக் கடவாதே இடர்வரும் என்தாயே
ஈராறு கரத்தோனே இனங்குவாய்
தாயே நீ வணங்குவாய்

வள்ளி தரு.

மதிகெட்ட மாமுனியே மன்றலது செய்யுமென்றீர்
துன்மதியின் வார்த்தையாலே
தூராவீர் வீணனபோராவீர்

நாரதர் தரு.

கழுகுமலைகந்தரைநீ களிப்புடன் மணமுவிட்டால்
கண்டபடி யெந்தனைநீ பேசுகிறாய் வீணாக பேசுறாய்

வள்ளி தரு.

அன்னை தந்தை அருகிருக்க என்னைவந்து மணருமென்றீர்
இம்மொழிகள் உந்தனுக்கு ஏர்க்குமோ
வீண்மதி வாய்க்குமோ

நாரதர் வசனம்.

சபாஷ் நல்லது யானே நாரத முனியாயிருப்பது உண்மையாகில் உன்னை அந்த கழுகாஜலக் கடவுளுக்கே நான் மணரும்படி உன்னை முடிக்கின்றேன் சபாஷ் பார்த்துக் கொண்டு வருகின்றேன்.

வள்ளி வசனம்.

பார்க்கலாம் உன் சாமார்த்தியத்தை முனியே.

சீன்—2. தர்பார்.

சுப்ரமணியர் நாரதர் சந்திப்பு.

நாரதர் விருத்தம்.

அராகரு போற்றி போற்றி அநாதியாயருளே போற்றி
அசுர சம்மாரு போற்றி
அருமுகா போற்றி போற்றி.

தெய்வானை விருத்தம்.

சின்மய நாதாவுந்தன் சீர்பாதம் போற்றி போற்றி.

சுப்ரமணியர் விருத்தம்.

வந்த காரணத்தை நீரும்
வழுத்துவீர் வகையாய் தானே.

நாரதர் விருத்தம்

சஞ்சரி சமேதா யானும்
குணமுடன் போற்றினேனே.

சுப்ரமணியர் தரு.

(மார்கழி மாதம் என்ற வர்ணமெட்டு.)

காரண ணடியை நாளுமே பணியும்
நாரதா யெழுந்தருளும்
நங்கையுடனிருக்கும் கந்தனை தேடினீர்
வந்தவகையை யருளும்
சென்ற யிடங்களிலே சீராக கண்டுவந்த
சிரப்புள்ள கணப்பொருளும்
தெரிய முருகனுக்கு சிகப்புகளனைத்தையும்
சீருக புகன்றருளும்

சுப்ரமணி வசனம்.

கல்யாண் நாரத முனியேதாம் கயங்கெங்கு சென்றீர் என்ன விசேடங்களைப் பார்த்தீர் எடுத்துரைப்பீர்.

நாரதர் வசனம்.

சுப்ரமண்யம் நானோர் கனியைக்கண்டேன் அக்கனியானது தேவர்க்கும் மூவர்க்கும் யாவர்க்கும் திகட்டாதது அவர்களுக்கும், எட்டாத

கனி அதிலும் அன்னநடையும் மின்னலிடையும் வர்ண உடையும் சொர்ண நிறத்தையும் கூடிய கனி அக்கனியை மிக்க ஆவலுடன் முக் கண்ணன் புத்திரனாகிய தங்களுக்கே தக்கதென மனதில் நினைத்தார் போல் தெரிகின்றது.

சுப்ரமணியர் தரு.

மார்க்கத்தில் கண்டகனி தனுக்குற்ற
சிலாக்யமென்ன முனியே.

நாரதர் தரு.

அதைநோக்கும் பொழுதே அய்புலன்களுக்கு
ருசிதரும் தீங்கனியே.

சுப்ரமணியர் தரு.

அதைபக்ஷி கண்டாளோ இன்னேரமதைக் கோரி
பக்ஷிகள் கொய்திடாதோ.

நாரதர் தரு.

அதை பக்ஷிகள் கண்டாளோ பயங்தோடு மாகையால்
பக்ஷமுடன் செல்வீர்.

சுப்ரமணியர் தரு.

எட்டாத கொம்பினில் இருந்தாலோ அக்கனியை
எப்படி கொய்திடலாம்

நாரதர் தரு.

அதை எட்டும்படிக் கிருகொம்புண்டு
அதைபற்றி எரி பரித்திடலாம்

சுப்ரமணியர் தரு.

வளர்ந்து முதிர்ந்த அத்தீங்கனி கெவ்விதம்
மேவும் குறிகளுண்டோ

நாரதர் தரு.

கொங்கை யிரண்டுண்டு குளிர்ந்த முகமுண்டு
கோதிலா வதனமுண்டு

சுப்ரமணியர் தரு.

பெண்களுக்குள்ள குரிகளிருப்பதால்
பேசுமோ வாய்திறந்து

நாரதர் தரு.

ருக பெண்களுக்கெல்லாம் சுவைதருமே
அந்த பைங்கொடி வாய்திறந்தால்

சுப்ரமணியர் வசனம்.

நாரத முனியே ஆம், வாஸ்துவம் தான் இன்னம் ஒன்று.

சுப்ரமணியர் தரு.

(முத்திநெறி அறியாத என்ற வர்ணமெட்டு.)

திங்களளி செஞ்சடையோன் திருவடியை நாடிவரும்
நாதரே உமைக் கோரினேன்
நவின்றிடுவீர் அவள் பெருமை

நாரதர் தரு.

சிற்றாறும் சின்மயமே சொல்கிறேன் கேள்
பெண்ணொருத்தி
தினைபுனமே காக்கலுற்றாள்
தேசிசோ என் சொல்வேன்

சுப்ரமணியர் தரு.

பெண்ணென்றீர் பேருமென்ன
புகன்றிடுவீர் அவள் பெயரும்
பெம்மானே உமதருளால்
பெண்ணவளை கூடிடுவேன்

நாரதர் தரு.

வனமயிலோ இனக்குயிலோ
வள்ளியென்பார் அவள் பெயரும்
வானவரும் மயங்கிடுவார்
வள்ளாலே என் சொல்வேன்

சுப்ரமணியர் தரு.

நங்கையவ ளிருக்குமிடம்
நானறிய நவின்றிடுவீர்
நாரதரே சரணமையா
நாளுமுமை தொழுகுவேனே

நாரதர் தரு.

நம்பிராஜன் வாழ்நாடாம்
நவிலுவதை கேளுமையா
தினைபுனமே கார்க்கலுற்றாள்
தென்னாடே சென்றிடுவீர்

சுப்ரமணியர் வசனம்.

அ ஆ இதுயென்ன ஆச்சரியம் இவ்வளவு மகுத்துவம் தங்கிய கனியைப் பாராத கண் ஆனால் அதை மனதில் நினைந்து கொண்டிருந் தாலே போதும் ஆகையாலதைப் பார்த்து வருவோம்.

நாரதர் வசனம்.

நான் இவ்விடத்திலேயே இருக்கின்றேன் தாங்கள் இதோ தெரி கின்ற பரணைக்கு சமீபமாய் சென்று பார்த்து வாருங்கள்.

சுப்ரமணியர் தரு.

(போய் வருவீர் என்ற வர்ணமெட்டு.)

மையலாகினேன் மையலாகினேன்
மையலாகினேன் நாதா வள்ளியின்மேல்
மையலாகினேன் நாதா
அன்னவளை கண்டு நானும்
அணைகுவேன் இன்னேரம்
சொல்லும்போதே சொக்குதே மனம்
வள்ளியின்மேல் சொக்குதே மனம்
என்னசெய்வேன் சொக்குதே மனம் (மை)

சுப்ரமணியர் வசனம்.

அ ஆ அவள் பெயரைச் சொல்லும்போதே அளவில்லா மோக த்தை தருகின்றதே அவள் அருகில் சென்றால் எவ்வாராமோ முனியே.

நாரதர் வசனம்.

முருகா என் சொல்வேன் அந்த மங்கையை தேவர்கள் கண்டா லும் மயங்கி விடுவார்கள் யான்வரும் வழியில் அன்னவளைக் கண்டு உன க்காகத்தான் வார்த்தைகளாடினேன் அன்னவள் அதற்கு இசையா மல் என்னை தூஷணமாகத்தான் பேசினாள் அதற்கு நான் நாரத முனி யென்பது உண்மையாகில் உன்னையான் அந்த கழுநாஜலக் கடவுளுக்கே

திருமணம் முடிக்கிறேனென்று சப்தம் கூரிவந்தேன். ஆகையால் நீ தக்ஷணமே சென்று அன்னவளை எந்த விதத்திலும் திருமணம் முடித்தே வரவேண்டும். எனக்கு நேரமாய் விட்டது. யான் சென்று வருகின்றேன்.

சும்ரமணியர் வசனம்.

அதற்கென்ன தடையா உம்முடைய தயவு இருக்கின்ற வரையில் எனக்கு யாது குறைவு இருக்கின்றது இதோ செல்கின்றேன் முனிவரே.

தெய்வானை தரு.

(டரோ நாம முகமது என்ற வர்ணமெட்டு.)

குண்டுனி நாரதா கொள்கையிது தானோ
கூட்டிவைக்குந் தொழிலோ உனக்கு
சேர்த்துவைக்குந் தொழிலோ
சீசீ செல் செல் செல்
யெட்ட நீ நில் நில் கிட்டவருமல் போவாய்

நாரதர் தரு.

வனத்திற் கண்ட வள்ளி
வர்ணிப் பையானுமே
வள்ளலுக் கெடுத்துரைத்தேன் என்னம்மா
மன்னனுக் கெடுத்துரைத்தேன்
அன்னவர் மோகித்து அணையவே யோசித்து
அங்கனம் யேகலுற்றார் என்னம்மா
அங்கனம் யேகலுற்றார்

தெய்வானை தரு.

குடியைக் கெடுக்கவோ குண்டுனி நாரதா
குவலயம் சுற்றி வந்தாய் நாரதா குடியை
ரெண்டாகச் செய்தாய்
நங்கை யிருக்கையில் மங்கை யொருத்தியை
மணரச் செய்வதழகோ நாரதா
மணரச் செய்வதழகோ

நாரதர் தரு.

அன்னை தெய்வானையே அருமுகன் தேவியே
அமருவாய் சினந்தனிந்தே என்னம்மா

அமருவாய் சினந்தனிந்தே
குமரவேல் மங்கையே குஞ்சரி தேவியே
கோபம் நீ கொள்ளவேண்டாம் என்னம்மா
கோபம் நீ கொள்ளவேண்டாம்

தெய்வானை வசனம்.

நாரதரே உமக்கு கொஞ்சமேனும் புத்தியிருக்கின்றதா இல்லையா குடியை கெடுக்க எத்தனை நாள் விரதம் பூண்டிருந்தாய் இத்தொழில் உமக்கு தகாது இது சரியல்ல போய்விடுவீர் நாரதரே.

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி நமது குலதெய்வம்போல் வந்தவரை ஏன் பழிக்கின்றாய்

தெய்வானை வசனம்.

நமது குடியைக் கெடுக்க வந்தவர் குலதெய்வமோ.

சுப்ரமணியர் தரு.

(தெய்வ சபை போகவேணும் என்ற வர்ணமெட்டு.)

அடிமானே யானுமின்று சென்று
மான் வேட்டைகளாடி
அந்த மாலைப்பொழுதாக வாரேன்
மங்கையே நீ பாராய்

தெய்வானை தரு.

போகும்விதம் யானரிவேன் பொகுசு கெட்ட முனியா
அந்த நாரியரை நாடி நீரும்
நடக்கலுற்றீர் நாதா

சுப்ரமணியர் தரு.

மாதே உன்னைவிட்டு யானும்
மற்றொருத்தி பாரேன் அடி
மங்கை உனைவிடவே வேறு
மாதுதனை வேண்டேன்

தெய்வானை தரு.

வேறொருத்தி வேண்டாமென்றே
வேலவரே பாரும் அந்த வள்ளியுடன்
வந்தாளிங்கு வரவே வேண்டாம் நீரும்

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி அப்படி ஒருக்காலமும் கவனிக்க வேண்டாம் உன்னை விட வேறொரு நாயகி எனக்கு ஏன் நாயகி.

தெய்வானை வசனம்.

பார்க்கலாம் நீர் தவிர வேறே யாரையாகிலும் அழைத்துவரும் பட்சத்தில் தங்கள் மானம் போய்விடும் போய்வருவீர்.

சுப்ரமணியர் தரு.

(தாஜ ராஜ என்ற வர்ணமெட்டு.)

மாது வள்ளிமீதில் யானும்
மையல் கொண்டேனே அந்த
மங்கையு மெந்தனை மருவி முத்தந் தந்து
மகிழச் செய்வாளே
அல்லலை தீர்த்திடும் அன்பா யெந்தனை
ஆதரித் திடுவாளோ என்
அங்கமும் பதறுது ஆவியும் சோறுது
அகன்றிட செய்வாளோ
என்னுஞன் செய்குவேன்
எவ்வித முய்குவேன்
எவ்வாருய் செல்வேன் மாது

சுப்ரமணியர் வசனம்.

நாரதர் சொன்னபடியே தினைபுனத்திற்குச் சென்று அந்த வள்ளி நாயகியை கூடிய சீக்கிரம் விவாகம் செய்துக்கொண்டு வருவோம்.

சுப்ரமணியர் தரு.

(போய் வருவாய் கண்மணியே என்ற வர்ணமெட்டு.)

மங்கையவள் யெங்கனமோ
மாதுயிளங் கொடியைக் காணேன் மங்கை
எவ்வனத்தை நாடிச் செல்வேன்
எந்த ரூபம் நானெடுப்பேன்
வஞ்சியிளங் கொடியைக் காணேனே மங்கை
வேடுவனைப் போலே நானும்
வேஷமது நானெடுப்பேன்
வேண்டி யென்னை சேர்ந்திடுவாளோ மங்கை

தினைபுனமே யவளிருப்பாள்
தீவிரமாய் சென்றிடுவேன்
தீரனுன்னை கோரியே வாரேன்
பாருய் என்ன நாரியே நீயும் மங்கை

சுப்ரமணியர் வசனம்.

ஆகையால் நாம் இந்த ரூபத்துடன் செல்லக்கூடாது வேடுவனைப் போல் ரூபமெடுத்து செல்ல வேண்டும்.

சீன்—3. தர்பார்:

தினைபுனம் வள்ளிநாயகி பக்ஷிகளை விரட்டுதல் வேடரூப மாருதல்.

வள்ளி தரு.

(கானகத்தில் சென்று நானும் என்ற வர்ணமெட்டு.)

அன்னம்போல் வந்திரங்கும்
அருமையுள்ள பக்ஷிகளா அருமையுள்ள பக்ஷிகளா
அன்னீதமாய் சாகவேண்டாம் அகன்றிடுவீர்
சிட்டுக் குருவிகளா சீர்மையுள்ள பக்ஷிகளா
சீர்மையுள்ள பக்ஷிகளா
சீருக ஒன்ருய் சேர்ந்து சென்றிடுவீர்
மாதுமனஞ் சலித்தால் மாண்டு மடிந்திடுவீர்
மாண்டு மடிந்திடுவீர்
மங்கை மனம் நொந்திடாமல்
அகன்றிடுவீர்
அண்ணன்மார் வந்துவிட்டால்
அம்பாலே யெய்திடுவார்
அம்பாலே யெய்திடுவார்
அன்னீதமாய் சாகவேண்டாம் அகன்றிடுவீர்

சுப்ரமணியர் வசனம்.

அ ஆ இந்த வனந்தானே தினைபுனம் யென்பது அதோ பரணையின் மீது ஓர்மாது வீற்றிருக்கின்ருள் அவள் அருகில் சென்று பார்ப்போம்.

சுப்ரமணியர் தரு.

(ஆவல் மிககொண்டேனடி அஞ்சுகமே என்ற வர்ணமெட்டு.)

இவளை பார்த்திருந்தாலும் போதுமே
பக்ஷமுள்ள பாங்கியிவள் க்ஷணத்தை இக்ஷணமே,
பூர்த்தமலர் நேர்விழியாள் பூவலர் சீன்மான் மொழியால்
மாருரதி மங்கையவள் அங்கம் தன்னில்
தங்கும் கொங்கையை
தினைபுனத்திற் கரசியிவள்
தெய்வலோக ஊர்வசியோ யிவள்
அரியேன் மர்மமரியேன் விட்டுபிரியேன் இவளை தொழுவேன்
பச்சை திருமேனி யிவள்
பாருலகம் மதிக்கும் பார்வை
பாவை ஒய்யாரி நடன சிங்காரி இவளை (பார்)

சுப்ரமணியர் வசனம்.

அ ஆ இந்த ரூபலாவண்யமுள்ள மங்கையை நாம் எப்பொழுது பார்த்திருந்தாலும் நமது கலி தீருமே அ ஆ இவளுடைய வர்ணிப்பை யென்னுவினல் சொல்லத் தரமோ.

சுப்ரமணியர் கலித்துரை.

காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே-புல்
மேயாதமான் புள்ளி மேவாதமான் விழியந்தமான்
சாயாதகொம்பு யிரண்டே யிருந்தாலுந் தலைநிமிர்ந்து
பாயாதமான் வந்து பட்டதுண்டோ வுந்தன் பார்வையிலே.

சுப்ரமணியர் சுலோகம்.

விண்மணியோ சதுர்வேத சுரூப மணியோ
வித்தான ஞான மணியோ
கண்மணியோ சந்திரகாந்த மணியோ
கனக ப்ரகாச மணியோ
நண்மணியோ தேவதானவர்க்கான மணியோ
தரமான வைர மணியோ
பண்மணியோ அருட்பாவலர் பாடு மணியோ
பற்றிலா பிரணவ மணியோ

வள்ளி சங்கராபரணம்.

எந்த மானிட வேடர் நீர்காண் உமது வேட்டைக்கு
ஏற்றமான் அம்மலையிலுண்டு இந்தமான் நம்பி
தந்தமான் உமது வலைக்கு அகப்படாத மான்
தைரியமான் சௌரியமான் ஜாதிமான் யான்
அந்தமானைத் தேடிய ஆண்பிள்ளை நீர் அன்புடனே
பெண்பிள்ளைக்கு அபயம் போட்டு சொந்த அம்மான்
மகன்போல் ஏதேதோ பேசுகிறீர்
எந்தோழியை விட்டு விரட்டுவேனே.

த ரு.

(மாதே வீணுய் என்ற வர்ணமெட்டு.)

அண்டர்க் கிளியா மணியோ
தொண்டர் பணிமா மணியோ
தண்டமிர் புகழ் மணியோ
மண்டலம் புகழ் மணியோ
இங்குயிவள் என்னினமோ
இணங்கிடும் நன்மணமோ
சங்கீத குயிலினமோ
சார்ந்த நடை மயிலினமோ
அன்னமோ என்னமோ
வர்ணக்கிளி மொழிவதனை இவள்தான்

சுப்ரமணியர் வசனம்.

நல்லது நாம் இவ்விடம் நின்று வர்ணித்துக்கொண்டிருந்தால் யாது பிரயோசனம் அருகில் சென்று விஜாரிப்போம்.

சுப்ரமணியர் தரு.

நீயார் யார்சகி பார்மீதில் பாவை யார்
பாலவனந்தனில் பரணை மேலுற்றவள்

வள்ளி தரு.

அய்யாகேள் கேளைய்யா
பார்புகழ்மன்ன பகருவேனின்னாள் கேள்
பகர்ந்துக் கொள்முன்னாள்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183695

சுப்ரமணியர் தரு.

கார்குழைமாதே யோர்மதபாவி
தூர்செய்ய வந்தேன் நீ யார்

வள்ளி தரு.

சிருவள் நடையாள் சிற்றாரென்பாரே
சிருவள் நாமதேயம் வள்ளி யென்பாரே கேள்

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி நீயார் நான் வேட்டை மார்க்கமாய்வந்து ஓர்மானை துரத்திவர அம்மானனது தப்பித்து வந்துவிட்டபடியால்.

சுப்ரமணியர் தரு.

(வலைதப்பி யிருக்கும் மான்களோ என்ற வர்ணமெட்டு.)

அன்னமே யிந்தவனத்தி னேராகவே
அற்புதமான் வரகண்டீரோ யேகவே
நன்னயமாகவே யென்வலை மீறியே
காடியே வேகமா யிவ்வழி கோறியே

வள்ளி தரு.

ஏன்காணும் நீர்சில வேடரே மானை
இங்கு தேடியோடி வந்தீரோ
போங்காணும் மானுக்கடையாள மேதுண்டோ
புள்ளிமான் வள்ளியா ளிங்கிருக்கக் கண்டோ

சுப்ரமணியர் தரு.

கண்டிருந்தார் சொல்லுவாயடி கன்னியே
காணேனென்னுர் சொல்லுவேனுனை யெண்ணியே
அண்டியே வந்தவனுக்கேதோ விள்ளுறுய்
அல்லாமலுந்தன் வார்த்தையை தள்ளுறுய்

வள்ளி தரு.

கள்ளமனங் கொண்டு வேடனே வந்தாய்
காதலியானிட மூடனே கேளாய்
உள்ளதை கொண்டுவந்த னூருக்கே செல்லடா
உதவாத காரியம் நடவாது செல்லடா

சுப்ரமணியர் தரு.

கொஞ்சும் கிளிமொழி வஞ்சியே ஞாயமோ
கோதையே நீசெய்வது சம்ப்ரதாயமோ
அஞ்சியே கொண்டவள் போலவே பேசுருய்
அகமகிழ்வாய் வந்தாதரவா கூசுருய்

வள்ளி தரு.

வேடனே முழுமூடனே போடா
வீரியம் பேசாதே கூறுவேனடா
ஆடவர் மின்னிடமாகவே சூதுக
ளரைவது ஞாயமோ விரைவுடன் செல்லடா

சுப்ரமணியர் தரு.

சிந்தை மகிழ்ந்துமே வந்தனே யெந்தனே
சேயிழையே வுன்னைநாடியே வந்தேனே
கந்தமலரணை மீதிலிரு பேரும்
காமலீலை செய்ய தாமத மேனேடி

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி நீயார் இவ்விடம் தனிமையா யிருக்கின்றனேயே உன்னுடைய நாமதேயமும் உன்தந்தையின் நாமதேயமும் தெரிவிப்பாய்.

வள்ளி வசனம்.

அய்யா யாரைக் கேழ்க்கின்றீர் ஆனல் தெரிவிக்கின்றேன் கேழ்ப்பீர்.

வள்ளி தரு.

(என்னடி நான்பெற்ற மங்கை என்ற வர்ணமெட்டு.)

தந்தையின் பேர் நம்பி யென்பார்
வேடரென்பார் இவ்வூரென்பார் எந்தன்
நாமதேய வள்ளி யென்பார்

சுப்ரமணியர் தரு.

மாதே வுன்னழகாலே மாரீனும் மயங்குருன்
மையலாகு தென்ன செய்வேன் மனம்
தணலா யெரியுதென் செய்வேன்

வள்ளி தரு.

புத்தியில்லா முழுமூடா குடிகேடா
அடா வேடா
நீயும் யெட்டிநீ அப்புரம் போடா

சுப்ரமணியர் தரு.

மங்கையே உனைவிட்டு யெங்கனம் போகுவேன்
மாதுயிளங் கொடியாளே பசும்
பொன்னின் னிரமேனியாளே

வள்ளி தரு.

கற்றதெல்லாம் கழருதே எனையிகழாதே
உனை புகழாதே எந்தன்
கவுண்டு கல்லால் நீமோளாதே

சுப்ரமணியர் தரு.

மாள்வேனோ உன்னாலே யாள்வேனோ உன்னாலே
மதியில்லாமல் நீ பேசாதே இங்கு
கெதியில்லை யென்று யேசாதே

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி யென்னை இன்னானென்று அரியாமல் ஏன் சும்மா உளருகிறாய் அப்படி ஒருக்காலமும் கவனிக்க வேண்டாம் என் கவலையை தீர்ப்பாய்.

சுப்ரமணியர் தரு.

(மையலாகினேன் என்ற வர்ணமெட்டு.)

மோகமாகினேன் மோகமாகினேன்
மோகமாகினேன் வள்ளி உந்தன் மீது
மோகமாகினேன் வள்ளி
ஆகமவே தங்கள் நண்குணர்ந்த
அரிவையே வள்ளி என்னரும்
பாவையே வள்ளி

வள்ளி தரு.

பொருப்பீரைய்யா பொருப்பீரைய்யா
பொருப்பீரைய்யனே என்னபுத்தி
பொருப்பீரைய்யனே

சிறுவள்மீது மையலாகி செய்வதென்ன நான்
வேடுவனே செய்வதென்ன நான்

சுப்ரமணியர் தரு.

பொருக்க யென்னல் வசமல்லவே
பூவையே வள்ளி என்னரும்
பாவையே வள்ளி
அருகில்வந்து சேர்ந்தணைந்து
அன்பாய் வசனிப்பாய் கண்ணே வள்ளி
அன்பாய் வசனிப்பாய்

வள்ளி தரு.

அருகில் வந்தால் ஆவல் தீருமோ
அரிவு கெட்டவனே மையலான
அரிவு கெட்டவனே
அண்ணன்மார்கள் வந்தாலுன்னை
கண்டிதம் செய்வார் வனவேடா
கண்டிதம் செய்வார்

சுப்ரமணியர் தரு.

அண்ணன்மாரை யறிவேனடி
அன்னமே வள்ளி என்னரும்
சொர்ணமே வள்ளி
மாயவேடனென்று யென்னை
மதித்துப் பேசுருய் கண்ணே வள்ளி
சோதித்துப் பேசுருய்

வள்ளி தரு.

மாயமென்றனை மிரட்ட வேண்டாம்
மதியிழந்தவனே மதிமூடா
எனைத் துரந்தவனே
சோதனையென்ன வேதனை வேண்டாம்
வகையாய் சொல்லுவாய் வேடுவனே
வகையாய் சொல்லுவாய்

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி இப்படி சொல்வது தகாது என் கவலையை தீர்ப்பாய்.

வள்ளி தரு.

(போ போ வேடனே செல் செல் என்ற வர்ணமெட்டு.)

செல் செல் வேடனே செல் செல் — வெகு
சிரிப்பும் கெலிப்புடனே வந்தாய் — செல் செல்

சுப்ரமணியர் தரு.

அன்னமே நானுமே ஆவலாய் வந்தேனே
சொர்ணமே என்செய்வேன் — கண்மணியே
சேர்ந்திட நான்வாரேன்

வள்ளி தரு.

போ போ போக்கிரி பயலே — என்னை
சோதிக்கவா யிங்கு வந்தாய் — போ போ

சுப்ரமணியர் தரு.

சோதனை யல்லவே மாரனு மெந்தனை
வேதனை செய்குறானே — கண்மணி நீ
வாதுநீ செய்வதேனோ

வள்ளி தரு.

ஆகட்டும் ஆகட்டும் சீசீ — எந்தன்
அண்ணன்மார்கள் வரட்டும் — பார் பார்

சுப்ரமணியர் தரு.

அன்னமே நானுமே ஆண்சிங்கம் நானிருக்க
அண்ணன்மார் என்செய்வார் — அருங்கிளி
அம்புக்கு யிரையாவார்

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி என்னிடமிருக்கும் வேலாயுதத்தை பார்த்தனையா உன் அண்ணன்மார் இதற்கு இரையாவார்கள்.

வள்ளி வசனம்.

ஏன் வீண்வாது செய்குறீர் இன்னம் கொஞ்சம் நேரம் நீ யிருப்பாயாகில் மாண்டுவிடுவாய் ஓடிப்போய்விடும்.

சுப்ரமணியர் தரு.

(வாது வாது செய்கிறாய் என்ற வர்ணமெட்டு.)

வாடிமானே கூடலாம்
கொஞ்சி விளையாடலாம்
அடிமானே பசுந்தேனே
உனைநானே அணைவேனடி

வள்ளி தரு.

புத்தியில்லா மூடனே சுத்தக் குடிகேடனே
மதிமூடா குடிகேடா வெரியோடா அடபோடா

சுப்ரமணியர் தரு.

செங்கை யென்னைப் பார்க்குதே
கூடமனதும் நாடுதே
அடிமாதே யிப்போதே என்னை
சேர வருவாயடி

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி நீ இந்த பருவகாலத்தில் அல்லவா தக்க நாயகனைக்கூடி சுகிக்க வேண்டும் இதைவிட்டு என்னை மிரட்டுகின்றனை தயவுசெய்து மணருவாய் கண்மணி.

வள்ளி வசனம்.

ஏன் வீண்வாது செய்கின்றீர் என் தமையன்மார்கள் வரும் வேளை யாய் விட்டது தப்பித்து ஓடிப்போய்விடும்.

சுப்ரமணியர் தரு.

(வீண்மொழிகளை பேசி இங்கனம் என்ற வர்ணமெட்டு.)

கண்மணி கண்மணி காதல்மீருது கண்கள் சோருது
கார்த்து ரக்ஷிப்பாய்

வள்ளி தரு.

நீ கவனம் கொள்ளாதே

சுப்ரமணியர் தரு.

மாதுயென்னிடம் வாதுநீ செய்யாதே
மயங்குதே மனம் தியங்குதே குணம்

சேருவாய் சேருவாய்
சோரனல்லவே மாரன்யானுமே
நங்கையே பாரும்

வள்ளி தரு.

நீமோண்டு விடுவாயே

சுப்ரமணியர் தரு.

மாள்வேனே விட்டு போவனே அடி
மாரனுசையை தீர்ப்பாயடி
வள்ளியே வள்ளியே
வனமயிலோ இனக்குயிலோ
உந்தனே விடுவேனே

வள்ளி தரு.

(அய்ய வேடர்களே என்ற வர்ணமெட்டு.

ஓ அண்ணமார்களே

சீன்—4. தர்பார்.

வேங்கைமரம்.

வேடர் தரு.

வந்தோம் வந்தோம் வேடரிங்கு இந்த
வனந்தனில் மரந்தனைக்கண்டு யாங்கள்
கொண்டோம் கொண்டோம் கோபமிங்கு இதை
கொய்திட மனமது கொண்டு

வள்ளி தரு.

வேண்டாம் வேண்டாம் சொன்னேன் அண்ணு
இது ஓங்கி வளர்ந்ததே இன்னாள்
பாங்கி நான் இங்கனமிருக்க அது
ஓங்கிவளர்ந்த சுருக்காய்

வேடர் தரு.

வேலூர் ஜில்லாவினில் தானே வெகு
சிரப்புள்ள வேலப்பாடி யாமே

சத்தி விநாயகர் வீதி
சன்னதிகருகினில் தம்மை
பிரியா சிவனருள் நேசன் வெகு
பாவலர் கொண்டாடும் விசுவாசன் அந்த
குருவாந் திரு சுப்பராயன் அவர்
பாதம் பணிந்திடும் சேயன்

வேடர் வசனம்.

தங்காய் எங்களை யாது காரணத்துக்காக வரவழைத்தாய் அதை தெரியச் சொல்லும்.

வள்ளி வசனம்.

அண்ணா ஒன்றுமில்லை இவ்விடம் புதியதாக ஒரு வேங்கைமரம் காணப்படுகின்றது. அதை கவனிக்கும்படி அழைப்பித்தேனே தவிர வேறொன்றுமில்லை.

வேடர் வசனம்.

அடா பார்த்திரா தம்பிமார்களே இவ்விடம் புதியதாய் ஒரு வேங்கைமரம் காணப்படுகின்றது. அதை வெட்டி விடுவோம் வாங்களடா.

வள்ளி வசனம்.

அண்ணா அதை வெட்ட வேண்டாம் நான் வெய்யலில் இருக்கின்றேன் அல்லவா வேங்கைமரம் நிழலைதரும் வெட்ட வேண்டாம்.

வள்ளி தரு.

(கண்மணிகாள் ஓடி வருவீர்கள் என்ற வர்ணமெட்டு.)

அண்ணமாரே போய்வருவீர்
அடியாள் வந்தனம்
தென்னவன் தயவினாலே
தினைபுனத்தை கார்த்திடுவேன்
உன்னிதமாய் வேட்டையாடி
ஓடி வருவீர்
பைங்கொடியாள் நினைக்கும்போது
பக்ஷமுடன் வந்திடுவீர்
உன்னிதமாய் வேட்டையாடி
ஓடி வருவீர்
வேங்கைமரம் நிழலைக்கண்டு
வேடிக்கையாய் நானிருப்பேன்

வேண்டும்போதே வந்திடுவீர்
அண்ணமார்களே

வேடர் வசனம்.

தங்காய் போய் வருகின்றோம் ஜாக்கிரதையாயிருப்பாய்.

வள்ளி வசனம்.

அண்ணமார்களே அப்படியே போய் வருவீர்கள்.

சீன்—5. தர்பார்.

வளையல் செட்டி.

சுப்ரமணியர் வளையல் செட்டி தரு.

(எந்தனது நாடு என்ற வர்ணமெட்டு.)

வர்ண வளையல் சொர்ண வளையல்
வாங்களேயோ ஆயி
அழகுள்ள பொன் வளையல்
வாங்கலேயோ ஆயி
கன்னியர்கள் இட்டுக்கொள்ளும்
கனத்த வளையல் ஆயி
கன்னிகழியா பெண்களுக்கு
கந்தனிடுவான் தாவி
குமரியர்கள் கோருமிந்த
கோண வளையல் ஆயி
குமரவேலன் கொண்டுவந்த
கெம்பு வளையல் ஆயி
வளையல் இட்டு வனந்திலிருந்தால்
வேண்டிவருவான் வேலன்
வேகமுடன் அழைத்து செல்வான்
வீரமுள்ள சீலன்

வள்ளி வசனம்.

வளையல் செட்டியாரே வாரும் உன்னிடத்தில் என்னென்ன வளையல் இருக்கின்றது கொண்டு வருவீர் பார்க்கலாம்,

சுப்ரமணியர் வளையல் செட்டி வசனம்.

என்னிடம் கருப்பு வளையல் சிகப்பு வளையல் பச்சை வளையல் நீல வளையல் அய்கோட்டு வளையல் பூநு வளையல் பொம்பாய் வளையல்

டப்பா வளையல் கோண வளையல் இன்னம் அனேகவிதமான வளையி லும் காப்பு கொலுசுகளும் இருக்கின்றது தாயே

வள்ளி வசனம்.

ஆனல் இதென்ன விலை தெரிவிப்பாய் பார்க்கலாம்.

சுப்ரமணியர் வளையல் செட்டி வசனம்.

தாயே உட்காரும் உனக்கு இஷ்டமான வளையல் போட்டுக்கொள் ளும் எனக்கு இஷ்டமான பொருளை கொடும்.

வள்ளி வசனம்.

என்ன அய்யா ஒத்திபோனல் கிட்ட கிட்ட வருகின்றீரே.

சுப்ரமணியர் வளையல் செட்டி வசனம்.

கிட்டவராவிட்டால் எட்டுமா வளையல்.

வள்ளி தரு.

(ஆ ஆ நில்லடா என்ற வர்ணமெட்டு.)

சீ சீ செல்லடா செல்லடா செல்லடா செல்லடா
விலகி நில்லடா

சுப்ரமணியர் வளையல் செட்டி தரு.

அ ஆ நில்லடி நில்லடி நில்லடி நில்லடி
அணைந்து செல்லடி

வள்ளி தரு.

எட்ட எட்ட சென்ருல் கிட்ட கிட்ட வாருய்
புத்தி கெட்டவேனே நீ

சுப்ரமணியர் வளையல் செட்டி தரு.

கிட்ட வராவிட்டால் எட்டுமோ வளையல்
சட்டமாய் சொல்லடி நீ

வள்ளி தரு.

ஆணவம் கொண்டுநீ அலைகுருயிங்கு
அண்ணன்மார்கள் வரட்டும்

சுப்ரமணியர் வளையல் செட்டி தரு.

அண்ணன்மார் வந்தாலும்
ஆண்சிங்கம் அஞ்சிடேன்
அணைந்து கூடடி

வள்ளி தரு.

பித்தம் பிடித்த பேயாண்டி செட்டியே நீ
பிணத்தாமல் போவாய்

சுப்ரமணியர் தரு.

பித்தமல்லவது சித்தத்தி னுள்ளது
சேரவே நீவாருய்

வள்ளி தரு.

உன் ஆவி யொழித்திடுவேன்

சுப்ரமணியர் தரு.

உன்னை கூடி சுகித்திடுவேன்

வள்ளி தரு.

சீ சீ செல்லடா

சுப்ரமணியர் தரு.

ஏனோ சொல்லடி

வள்ளி தரு.

வாதுகள் பென்னிடம் கூசாமல் பேசுருய்
ஞாயமாய் செப்பினேன் பாவையை விட்டுநீ

சுப்ரமணியர் தரு.

மோடிகள் செய்யாதே மோகத்தை தீரடி
காமனல் வாடுரேன் கண்மணி பாரடி ஆ ஆ கில்

வள்ளி வசனம்.

ஏன்காணும் செட்டியே இங்கு அதிகமாய் வார்த்தையாடுகின்ருய் இங்கு யாருக்கும் வளையல் வேண்டியதில்லை எடுத்துச் செல்லுவீர்.

சுப்ரமணியர் தரு.

(பூனு வளையல் பொம்பாய் என்ற வர்ணமெட்டு.)

வர்ண வளையிலும் சொர்ண வளையிலும்
இடுவேனே

அன்னமே யென்னுடன்
  அருகில் வா சொந்தமாய்
    வேண்டும் வளையலிடுவேன்

வள்ளி தரு.

வர்ண வளையிலும் சொர் வளையிலும்
    வேண்டேனே
போக்கிரி பயலே நீ போதனைகள் செய்யாதே
    உன் ஆவியை போக்கிடுவேன்

சுப்ரமணியர் தரு.

பூனு வளையிலும் பொம்பாய் வளையிலும்
    இடுவேனே
பூவையே உந்தனுக்கு பட்சமுடனே ஞன்
    லேசாக நானிடுவேன்

வள்ளி தரு.

பூனு வளையிலும் பொம்பாய் வளையிலும்
    வேண்டானே
பிச்சைக்கு வந்தவன் பெண்டுக்கழைத்தது போல்
    கிட்ட கிட்ட வந்தாயே

சுப்ரமணியர் தரு.

(போடா போடா மட்டியே என்ற வர்ணமெட்டு:)

வஞ்சி வஞ்சி யென்னுட
    கொஞ்சி கொஞ்சி யாடுருய்

வள்ளி தரு.

வாது வாது பென்னுடன்
    ஏது ஏது செய்குருய்

சுப்ரமணியர் தரு.

வாது இது அல்லவே
    வஞ்சி நானும் வந்தேனே

வள்ளி தரு.

சீ சீ சீ சென்று விடுவாய் நீயே

சுப்ரமணியர் தரு.

ஆவல் கொண்டு வந்தேன்
அன்னமே பார்

வள்ளி வசனம்.

என்காணும் வளையல் செட்டியாரே இங்கு அதிகமாய் வார்த்தை யாடாதே உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் வீண்வாது செய்குறாய் இங்கு யாருக்கும் வளையல் வேண்டாம் எடுத்துக்கொண்டு போய் விடுவீர்.

சுப்ரமணியர் தரு.

(கைபிடி மாதே என்ற வர்ணமெட்டு.)

இப்படி செப்பிடில் எப்படியெந்தன் மாதே
தர்ம மாகாதே
கைப்பிடி நாயகமே காதல் நான் கொண்டேனிங்கு
சொற்படி நடப்பாய் நீயும்
சொகுசா இருவரும் கூடி
மஞ்சள் அரைத்திடுவேன்
மார்மீது பூசிடுவேன்
நெத்திக்கு பொட்டாவேன்
நேர்விழிக்கு மெய்யாவேன்
காதுக்கு ஓலையாவேன்
கைவளையல் நானாவேன்
சீவிசினுக் கருப்பேன்
சித்திரம்போல் தொண்டு செய்வேன்
பஞ்சணையின் மீது
கொஞ்சி இருவரும் கூடி
அஞ்சலி செய்து என்னுடன்
கொஞ்சிவராமல் நீயும் (இப்படி)

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி என்னுடன் வாது செய்யவேண்டாம் நீ இடும்படியான வேலைகளை யெல்லாம் செய்து உனக்கு தொண்டு செய்து இருப்பேன் கண்மணி,

வள்ளி தரு.

(வேட்டைக்கு சென்றதோர் என்ற வர்ணமெட்டு.)

என்ன போங்காலமோ அடா
வளையல் செட்டியே நீ
ஏடா கூடம் பேசலுற்றாய்
ஏர்க்காதுபோ யெட்டியே
எந்தன் கரத்திலிருக்கும்
கவுண்டு கல்லாலுன்னை
கண்ட துண்டம் செய்திடுவேன்
கடுகவே நீ செல் செல் செல்
கானகத்தில் நான் தனியாய்
காவலிங்கு நானிருக்க
கண்டபடி பேசலுற்றாய்
காதகனே செல் செல் செல்
வேட்டைக்கு சென்றதோர் எந்தன்
அண்ணன்மார்கள் வந்திடில்
வீணாயிங்கு மாண்டிடுவாய்
வேண்டாம் வேண்டாம் செல் செல் செல்

வள்ளி வசனம்.

என் அண்ணன்மார்கள் அருகில் தான் இருக்கின்றார். வரும் வேளையாய் விட்டது. அவர்கள் வரும் பட்சத்தில் வீணாக மாண்டு விடுவாய் மரியாதையாக சென்று விடுவாய்.

சுப்ரமணியர் தரு.

(மாதே நீ வாதென்னடி என்ல வர்ணமெட்டு.

கண்ணே கருணை செய்வாய்
ஏனோ யென்னுடன் வாதுநீ செய்குறாய்
கண்ணே கருணை செய்வாய்

வள்ளி தரு.

சொன்னேன் சென்று விடுவாய்
அண்ணன்மார் வந்திடில்
அழிந்து நீ போவாயே

வள்ளி வசனம்.

வேண்டாம் எனக்கு கோபம்வரும் பட்சத்தில் என் கரத்திலிருக்கும் கவுண்டு கல்லால் மாளச்செய்வேன் சென்றிடுவீர்.

சுப்ரமணியர் தரு.

(மோகம் பொல்லாது என்ற வர்ணமெட்டு.)

அடிமாதே வருவாய் வாது
ஏனோ மாதே வருவாய்

வள்ளி தரு.

மோகம் பொல்லாது மோடியேனோ சாமி
மோகம் பொல்லாது

சுப்ரமணியர் தரு.

அந்த மாரன் கணையினாலே
மாரை துளைக்குறானே
ஆவி போகுதே யிங்கு
தாவி யென்னைச் சேருவாய் அடி மாதே

வள்ளி தரு.

பாவி ராவணன் தன்னை தாவு யிழந்ததுவும்
வாலி மாண்டது மிந்த
காமத்தாலல்லவோ மோ

சுப்ரமணியர் தரு.

பாவி ராவணன் சீதா தேவியை சூது செய்தான்
வாலி முரைபிசகி ஆலிங்கனம் சூது செய்தான்
மோகம் பொல்லாது
மோடி யேனோ

சுப்ரமணியர் தரு.

அல்லல் படுகுரேண்டி

வள்ளி தரு.

அல்லல் பட்டால் யாருக்கென்ன

சுப்ரமணியர் தரு.

வள்ளி யென்னைச் சேரடி

வள்ளி தரு.

பல்லை பிடிங்கிடுவேன் மோகம்

சுப்ரமண்யர் வசனம்.

கண்மணி நான் எவ்வளவு ஆவலாய் வந்தேன் நீ இவ்விதம் பேசுவது உனக்கு தர்மமா.

வள்ளி வசனம்.

என்காணும் வளையல் செட்டியாரே. இங்கு அதிகமாய் வார்த்தையாடுகின்றனை இங்கு யாருக்கும் வளையல் வேண்டாம் போய்விடும்.

சுப்ரமணியர் தரு.

(வாது வாது எந்தனை என்ற வர்ணமெட்டு.)

ஆவல் கொண்டுவந்தேன் அன்னமே பார்

வள்ளி தரு.

அரிவுகெட்ட மன்னவா அகன்று செல்லுவாய் நீ

சுப்ரமணியர் தரு.

புத்தியில்லா பூவையே புகல வொண்ணுது நீ

வள்ளி தரு.

வலிய வந்து யெந்தனை வாதுக்கழைக்கின்றனை

சுப்ரமணியர் தரு

வாது யிது அல்லவே வஞ்சி நானும் வந்தேனே.

வள்ளி தரு.

சீ சீ சீ சென்று விடுவாய் நீயே

சுப்ரமணியர் தரு.

வந்தே னடிமாதே உன்னைக்கோரி

வள்ளி தரு.

மதியில்லா செட்டியே மன்றாடாதே யிங்கையே.

சுப்ரமணியர் தரு.

மல்லிகை முல்லையே மணந்தரும் மங்கையே

வள்ளி தரு.

வீண்வழக்கு செய்யாதே
வேடர் கையால் மாளாதே

சுப்ரமணியர் தரு.

வேலன் நானுமல்லவோ
உன்னைவிட்டு போவேனோ

வள்ளி தரு.

சீ சீ சீ சென்று விடுவாய் நீயே

சுப்ரமணியர் தரு.

அஞ்சுகமே என்னை வஞ்சிக்காதே

வள்ளி தரு.

அஞ்சி அஞ்சி பார்க்குறாய்
மிஞ்சி மிஞ்சி வருகுறாய்

சுப்ரமணியர் தரு.

கழறும் வார்த்தை கேள் கேள்

வள்ளி தரு.

வருத்தம் வரும் பார் பார் பார்

சுப்ரமணியர் தரு.

ஏன் ஏன் சொல் சொல்

வள்ளி தரு.

சீ சீ செல் செல்

சுப்ரமணியர் தரு.

வா வா வா

வள்ளி தரு.

சீ போ போ போ

சுப்ரமணியர் தரு.

வந்து யென்னை சேர்ந்து முத்தம்
தந்து போகுவாய்

வள்ளி தரு.

தாசியல்ல வேசியல்ல
தாண்டி செல்குவாய்

சுப்ரமணியர் தரு.

கண்ணே கருணை செய்வாய் யேனோ
யென்னுடன் வாதுநீ செய்குறாய்

வள்ளி வசனம்.

நான் உமக்கு பல தடவை சொன்னாலும் உன்னிட மடபுத்தியை பேசுகின்றனே வேறில்லை செல்லுவீர்.

சுப்ரமணியர் தரு.

(ஆசியா ஆப்பிரிக்கா என்ற வர்ணமெட்டு.)

மங்கையே நான் உந்தன்மீது கொண்ட
மோகம் வெகு பொல்லாது வந்து
யென்னை சேர்ந்திடுவாய் பாவையே
அடிவாது வேண்டாம் வள்ளியென்ற பூவையே

வள்ளி தரு.

புத்தியில்லா முழுமூடா பூவையென்பது தகுமோடா
யேசாமல் நீசென்று விடுவாயோடா அட
வேடர் கையால் மாண்டு விடுவாயோடா

சுப்ரமணியர் தரு.

ஆறுபத்து நாலுவகை மாரி மாரி லீலை செய்தால்
வாடுமோ எந்திரேகமது வஞ்சியே அடி
வனக்குயிலே சேர்ந்திடுவாய் கொஞ்சியே

வள்ளி தரு.

ஆணுவத்தால் அழிய வேண்டாம்
அரிவையே நான் புகலுகின்றேன்
அகன்றிடுவீர் வளையல் செட்டியே சீ சீ சீ
பித்தம் பிடித்தலைய வேண்டாம் மட்டியே

சுப்ரமணியர் தரு.

மங்கையே நான் யென்ன செய்வேன்
மாரனும் பாணம் தொடுத்தான்
வாடுதோடி எந்தனுவி தாவியே திரு
சுப்பராயன் பதங்களை பாடியே

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி எப்பொழுது பெண் ஜென்மம் எடுத்தனையோ அப்பொழுதே ஒரு ஆடவனை மணர வேண்டுமென்று பல சுருதிகளிலும் முறையிடுகின்றதே அதைவிட்டு ஏன் மிரட்டுகின்றனை நீதியல்ல தயவுசெய்து மணருவாய்.

சுப்ரமணியர் வசனம்.

சரி நாம் கிழ ஜெங்கமரைப் போல் உருவை மாற்றி இவளை எப்படியாகிலும் ஏமாற்றி மணருவதே சரி.

வேடர் தரு.

(கானக வேட்டையாட இங்கு என்ற வர்ணமெட்டு.)

வேடுவ குலத்தில் தோன்றி அடே அண்ணே
அடே அண்ணே நாங்கள்
அடைந்தோமே கானகத்தில் அடே அண்ணே
இங்கு என்ன அதிசயமோ அடே தம்பி
அடே தம்பி துஷ்ட
வேங்கையுடன் சிங்கம் பாரடா அடா தம்பி
அடே தம்பி இங்கு
சேர்ந்திருக்கும் யிடமல்லவோ அடே அண்ணே
அடே அண்ணே நாம்
தங்கை வள்ளியுரைத்த அடே அண்ணே
அடே அண்ணே
கள்ள புள்ளியினம் மானை பார்ப்போம் அடே தம்பி
அடே தம்பி மிக
சந்தோஷம் கொண்டேனடா அடே அண்ணே
அடே அண்ணே அடே
இக்ஷணமே காட்டில் பார்ப்போம் அடே அண்ணே
அடே அண்ணே

வேடர் வசனம்.

தங்கா என்ன ஓர்விதமான முகவாட்டத்துடனிருக்கின்றாய் தெரியச் சொல்லும் தங்கா.

வள்ளி வசனம்.

அண்ணமார்களே எனக்கு ஓர்வித குறைவும் கிடையாது துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கும் இடமானதால் ரொம்பவும் பயமாயிருக்கின்றது. அதுதான் வேறென்றுமில்லை அண்ணமார்களே.

வேடர் வசனம்.

தங்கா இன்றைய தினம் போகட்டும் நாளைய தினம் நல்ல துணையாக உனக்கு பார்த்து வைக்கின்றோம் வருத்தப்படாதே தங்கா.

வள்ளி வசனம்.

அண்ணமார்களே அப்படியே போய் வருவீர்.

சீன்—6. தர்பார்.

ஜங்கமர் பிராப்தம்.

சுப்ரம்ணியர் தரு.

(நடந்தது என்ன சொல்லம்மா என்ற வர்ணமெட்டு.)

அமுது அளிப்பாருண்டோ
அரும்பசி தளியா ஆ. ஆ
அன்னக் களையாலே
ஆவி தடுமாருதே
அயன்சதி யிதுவாமோ அரியேன் தெரியேன்
அமுது அளிப்பாருண்டோ
அங்கமெலிந்தும் அங்கமும் நடுங்கி
நரம்புகள் தொங்கியும் காலத்தை கழித்தும்
திங்கள் சேர் வேலவன் தடியூணி தாங்கி
தள்ளாடி தள்ளாடி தனித்து வந்தவனுக்கு
அமுது அளிப்பாருண்டோ

வேடர் வசனம்.

தாதா எங்கேயிருந்து இவ்விடம் வந்தாய் ரொம்பவும் தள்ளாமையா யிருக்கின்றீரே யாது காரணம் தெரியச் சொல்லும்.

சுப்ரமணியர் வசனம்.

அப்பா நான் கண்டி கதிர்காமம் பழமுதிர் சோலை திருப்பரம் குன்றம் திருச்செந்தூர் திருப்பழனி மலை திருவேங்கிடம் திருபள்ளியூர் திருத்தணிகை திருவாலூர் திருவண்ணாமலை இப்வேர்ப்பட்ட இடங்களுக்கு சென்று வருகின்றேன் இங்கனம் கன்னிபா குமரி இருப்பதாக தெரிவித்தார்கள் அதை நீங்கள் தெரிவித்தால் வெகு புண்ணியமுண்டு.

வேடர் வசனம்.

தாதா இந்த தள்ளாமையில் மிகவும் வருத்தப்படுகின்றீர் இந்த வனத்தினிடமாக என் தங்கை வள்ளி அம்மாள் இருக்கின்ருள் அவளிடத்தில் சாப்பிட்டுக்கொண்டு என் தங்கையை பத்திரமாய் பார்த்திருக்க வேண்டும் தாதா.

சுப்ரமணியர் வசனம்.

அப்பா அவ்வளவு உபகாரம் செய்தால் அவளை பத்திரமாய் பார்த்துக் கொள்ளுகின்றேன்.

வேடர் வசனம்.

ஆனல் அப்படியே வாருமைய்யா குழந்தாய் இந்த பெரியவர் மிகவும் தள்ளாமையாயிருக்கின்ருர் அவருக்கு ஏதேனும் தேனும் தினைமாவும் கொடுத்து பத்திரமாய் பார்த்துக்கொண்டு இருப்பாய் நாங்கள் சென்று வருகின்ருேம்.

வள்ளி வசனம்.

அப்படியே பார்த்துக் கொள்ளுகின்றேன் அண்ணு போய்வருவீர் அய்யா பெரியவரே தள்ளாடி விழுவதைப் போல் இருக்கின்றீரே இப்படி உட்காரும்.

சுப்ரமணியர் தரு.

(கிழவா என்னமதி யிழந்தீரோ என்ற வர்ணமெட்டு.)

பாவாய் நானும் பசியை தாளேனே

வள்ளி தரு.

அய்யா நானும் அமுதளிப்பேனே

சுப்ரமணியர் தரு.

அமுதை நான் என் செய்வேன்
அன்னமதாவது அளித்திட புசிப்பேன் (பாவா)

வள்ளி தரு.

தேனும் தினைமாவும் பிசைந்துமே தருகிறேன்
பசியதை தனிப்பீரே அய்யா யானும்

சுப்ரமணியர் தரு.

சகியே யானும் சந்தோஷமும் கொண்டேன்

வள்ளி தரு.

கிழவா என்னமதி யிழந்தாயோ

சுப்ரமணியர் தரு.

கிழவன் என்றெந்தனை மதியில்லா மாதே
இழிவாக பேசுருய் (பாவாய்)

வள்ளி தரு.

ஒண்டி பிழைக்கவந்து பெண்ணென மதித்து
சண்டிப் போல் பேசுருய் கிழவா

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி சும்மா வேடிக்கையாக பேசினேனே யொழிய வேறில்லை அதற்காக கோபம் கொள்ள வேண்டாம் கிழவன் என்ன செய்யப் [illegible]ன்றேன் கொஞ்சம் தேனும் தினைமாவும் கொடுப்பாய்.

வள்ளிதிருமணம்.

வள்ளி வசனம்.

தாதா சாப்பிடும்.

சுப்ரமணியர் தரு.

(நாமே மகமது மூஸ்தபா என்ற வர்ணமெட்டு.)

தாக மெடுக்குது மாரை யடைக்குது
மானே என்செய்வேன்.

வள்ளி தரு.

தாக மெடுத்தாலோ தண்ணீரருந்துவீர்
தைய லென் செய்வேன்

சுப்ரமணியர் தரு.

தண்ணீரருந்த தாக மரியேனே
தயவு செய்குவாய்

வள்ளி தரு.

ஜங்கம தேவரே மங்கையின் பின்வாரும்
ஜுனை அருகில் செல்லுவோம்

வள்ளி வசனம்.

என்னய்யா மின்னே போகப்பார்த்து பின்னால் பின்னால் வருகிறுப் போல் நிமிருகிறதும் குனிகிறதுமாக யிருக்கின்றுயே.

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி இடுப்புவலி அதிகமாயிருக்கின்றபடியால் குனிகிறதும் நிமிருகிறதுமா யிருக்கின்றேன் வேறில்லை.

வள்ளி வசனம்.

அய்யா இந்த ஜுனையில் மெள்ளமாயிரங்கி ஜலம் சாப்பிடும்.

சுப்ரமணிபர் வசனம்.

வள்ளி நாயகி இந்த ஜுனையைப் பார்க்க பயங்கரமாயிருக்கின் றதே எப்படி இரங்குவேன்.

வள்ளி வசனம்.

அய்யா என் கையை பிடித்து மெள்ளமா யிரங்கும்.

சுப்ரமணிபர் தரு.

சரிந்தேன் விழுந்து காலொடிந்தேனே
கை கொடுப்பாய் எனை யெடுப்பாய்
தூக்கி யெடுப்பாய்

மங்கையே யிங்கனம் கங்கையால் விழுந்துமே
சரிந்தேன் விழுந்து
மங்கையே கொங்கையால் மயங்கியே
சரிந்தேன் விழுந்து

வள்ளி வசனம்.

கிழவனுக்கு என்னமோ கேடுகாலம் கிட்டிக் கொண்டதுபோல் காணப்படுகின்றது அதற்குதான் தாருமாருய் பேசுகின்றனே ஆச்சு ஆச்சு அய்யா என்கையை பிடித்து மெள்ளமாயிரங்கும் அய்யா உனக்கு தாகவிடாய் தீர்ந்ததா.

சுப்ரமணியர் தரு.

(அய்யா நான் என்ன செய்வேன் என்ற வர்ணமெட்டு.)

தாக விடாயை தீர்த்தாய் கண்மணி நீ
மோக விடாயை தீர்ப்பாய்
வேலவ நானுமே வேண்டி இங்கு வந்ததால் (தாக)
அன்னிய நானல்ல அருமுகன் கண்மணி
கெஜமுள்ள நாதனுக்கு கீர்த்தியுள்ள தம்பி (தாக)

வள்ளி வசனம்.

கிழவனுக்கு கேடுகாலம் கிட்டிக் கொண்டது.

சுப்ரமணியர் வசனம்.

வள்ளி நாயகி உன்னை பலவாருப் சோதித்தேனன்றி வேறில்லை நீ காட்டினிடமாக இருக்கின்றனையே பல ஜாதி மிருகங்கள் வருமே பயங் கரம் கிடையாதோ.

வள்ளி வசனம்.

அய்யா பெரியவரே எந்த மிருகங்கள் வந்தாலும் என்னுடைய கவுண்டு கல்லால் மாளச் செய்வேன் அந்த பாழும் வெள்ளை யானை இருக்கின்றதல்லவா அதை கண்டால் தான் எனக்கு ரொம்பவும் பயங் கரம்.

சுப்ரமணியர் வசனம்.

நல்லது இவளுடைய சவிஸ்தாரங்களை தெரிந்துக் கொண்டோம் நம்முடைய தமையனுகிய கஜமுக கடவுளை தோத்திரம் செய்தால் தடை யில்லாமல் வருவார் அப்போது தான் இவள் நம்முடைய இஷ்டம் போல் மணம்புரிவாள்.

சீன்—7. தர்பார்.

கணேசர் யானையாய் வருதல்.

சுப்ரமணியர் தரு.

(எப்படி பிரிவேன் அப்பா என்ற வர்ணமெட்டு.)

அண்ணலே நாதா போற்றி அரிவையாம் பாவைக்காக
அருமுகன் வேண்டுகின்றேன்,
அத்தியாய் வருவீர் போற்றி நான்
வள்ளியை மணம்புணர
வெள்ளை யானையாய் வருவீர் போற்றி
வேலவன் நான் வேண்டுகின்றேன்
வேகமாய் வருவீர் போற்றி

வள்ளி தரு.

(அம்மா இதற்கு என்ன செய்வேன் என்ற வர்ணமெட்டு)

இங்கு இதற்கென்ன செய்வேன்
என்ன செய்வேன்
எவ்விதம் யானுய்வேன்
பாழும் கிழவனால் பாழும் ஆனையால்
பாவை பயந்தேனே
தீரத்தைவிட்டு நான் திகில் பட்டேன்
அம்மா அம்மா இதற்கென்ன செய்வேன்
அங்கம் பதரவே அலரச் செய்தாய்
அம்மா அம்மா இதற்கென்ன செய்வேன்

வள்ளி வசனம்.

பெரியவரே இந்த யானையை ஓட்டி விடுவீர்.

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி வள்ளி நாயகி என்னால் முடியாது.

வள்ளி தரு.

(காங்குவித்தேன் என்ற வர்ணமெட்டு.)

பார்க்க பயமாகுதையோ
பாழ் யானையை
கார்க்க கடவீர் அய்யா
கன்னி உன்னை தொழுதேனையா (பார்)
கபடமின்றி ஓட்டிடுவீர் காட்டானையை

சுப்ரமணியர் தரு.

கன்னி என்னை மணர நீயும்
காமதை போட்டு தந்தால்

கபடமின்றி ஓட்டிடுவேன்
காட்டானையை

வள்ளி தரு.

சண்முகன் சாட்சியாக
சாமி உன்னை மணர்ந்திடுவேன்
கபடமின்றி ஓட்டிடுவீர்
காட்டானையை

சுப்ரமணியர் வசனம்.

ஆனால் இந்த யானையை ஓட்டி விட்டால் என்னை விவாகம் செய்துக் கொள்கின்றனையா.

வள்ளி வசனம்.

அய்யா இந்த யானையை ஓட்டி விட்டால் உம்மையே விவாகம் செய்துக்கொள்கின்றேன்.

சுப்ரமணியர் வசனம்.

ஆனால் ஓட்டி விடுகின்றேன்.

சுப்ரமணியர் சுலோகம்.

(வேட்டைக்கு சென்ற எந்தன் என்ற வர்ணமெட்டு.)

மண்டலம் புகழுமெந்தன் மகிமைசேர் அண்ணு நானும்
மங்கையை கொண்டேன் பாகம்
மரைபட வேண்டுகின்றேன்

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி உன் சொற்படியே ஓட்டி விட்டேன் இனி என்னை மணருவாய்.

வள்ளி வசனம்.

ஏண்டா கிழவா சும்மா சொன்னேன் உன்னை அந்த மடுவிலிருந்து எடுத்தேனல்லவா அதனல் என்னிடம் இவ்விதமாக நெஞ்சு கொஞ்சமேனும் அஞ்சாமல் வஞ்சி இடத்தில் பஞ்சமா பாதகம் செப்பலாகுமா உன்னுடைய கட்டைக்கு பெண்டாட்டி இல்லாது திண்டாட்டமாகுமோ சீ சீ சீ தூரச் செல்லடா மூடா

சுப்ரமணியர் வசனம்.

ஆனால் இதோ யானையை அழைக்கின்றேன்.

வள்ளி வசனம்.

வேண்டாம் வேண்டாம்.

சுப்ரமணியர் வசனம்.

தக்ஷணம் மணருவாய்.

வள்ளி வசனம்.

அய்யோ நான் எனக்கு கணவன் முருகனென்று எண்ணினேன் இப்போது கிழவனுக்கு சம்மதிக்க ஏற்பட்டதே என்ன செய்வேன் ...வமே.

வள்ளி தரு.

தள்ளா கிழவனை தையல் மணம்புரிய
தப்பிலி பிர்மனாலே தயங்குதே என்மனது
வேல் முருகரை மணர வேண்டி தவமிருந்தேன்
வேலவரை விட்டயானும் விருத்தரை மணரலானேன்

வள்ளி வசனம்.

அய்யோ நாம் இந்த கழுகாஜல க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் சுப்ரமணிய கடவுளை மணர வேண்டுவதாய் தவமிருந்தும் பயனில்லை இந்த விருத்தாபியமான கிழவனை மணர தவ விதியோ.

சுப்ரமணியர் தரு.

பன்னிருகை வேலனடி
பால சுப்ர மண்ணியனடி
எட்டி குடி வாசனடி
ஏழைக் கிரங்கு வானடி

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி யான் தான் வேலவன் என்னை வேறுவிதமாக நினைத்து பலவாருய் தூஷித்தனை இருந்த போதிலும் குற்றமில்லை வருவாய் நகருக்குச் செல்லுவோம்.

வள்ளி வசனம்.

அப்படியே போவோம் பிராணனாதா.

நாரதர் சுலோகம்.

சவுரியம் கெலித்தா இங்கு
சண்முகா சமர்த்தன் நீயே

சுப்ரமணியர் சுலோகம்.

குருமுனி தயவிருக்க
குமர வேலன் தப்புவேனோ

வள்ளி சுலோகம்,

திங்கள் சேர்நாதா உந்தன்
திருவடி சரணம் சரணம்

நாரதர் வசனம்.

சுப்ரமணியம் அம்மா வள்ளி நாயகம் சுகமாய் இருங்கள் நான் சென்று வருகின்றேன்,

---

சீன்—8. தர்பார்.

வேடர்கள் யுத்தம்.

வேடர் வசனம்.

அடே யாரடா என் தங்கையை அழைத்து செல்பவன் இதோ பார் உன்பேரில் ஓர் பாணம் விடுகின்றேம் தப்பித்துக் கொள்,

சுப்ரமணியர் வசனம்.

அடே வேடர்களே என்னை கொல்ல உங்களால் ஆகுமோ ஏன் கஷ்டம் எடுத்துக் கொள்கின்றீர்கள் பேசாமல் ஓடிப் போவீர்கள்.

வேடர் தரு.

வீண்கெர்வம் அடைவதேனோ வீரனே சூரனே
தீரனே என் முன்னால்
வீணில் அம்பால் மாண்டிடுவாயே
விண்ணுலகம் சேர்ந்திடுவாயே

வேடர் வசனம்,

அடா இதோ பார் ஒரு பாணம் விடுகின்றேன் தப்பித்துக்கொள்.

சுப்ரமணியர் தரு.

(அடா அடா சித்தின என்ற வர்ணமெட்டு.)

அடடா அடடா வேடர்காள் என்
அஸ்திரத்தால் உங்கள்
ஆவியை போக்குரேன்
திடசித்தமாகவே தீவிரமாய் உங்களை
சிதைப்பேன் உதைப்பேன்
வதைப்பேன் உங்களை
அருமுகனென்று நீ அகத்தினில் கொள்ளாமல்
இருமாப்பு கொண்டு நீ இவ்வனந்தனிலே
இன்னானென் றறியாமல் இழிவாக பேசுறாய்
லேசாக விடுவேனோ கூசாமல் உங்களை
கூர்வேலினால் சிரசை
தக்ஷணம் கொய்திடுவேன்
பக்ஷணம் செய்திடுவேன்
கானகந் தன்னிலே கன்னி வள்ளி யானை
மணமது செய்யாவிடில்
மடியச் செய்வேன் உங்களை

சுப்ரமணியர் வசனம்.

அடே வேடர்காள் என்னுடைய சாமார்த்தியம் உங்களுக்கு தெரியாமல் அல்லவா குதித்தீர்கள் இதோ என் கரத்திலிருக்கும் வேலாயுதத்தால் மடியச் செய்வேன் பார்.

வள்ளி வசனம்.

சுவாமி அவாளுக்கு உம்முடைய மகிமை தெரியாது மன்னித்து எழுப்பி தருவீர்.

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி உனக்காக எழுப்பித் தருகின்றேன் அடா வேடர்களே எழுந்திருங்கள்.

வேடர் வசனம்.

சுவாமி உங்களுடைய மகிமை தெரியாமல் பேசிவிட்டோம் பொருப்பீர்.

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி நம்முடைய நகரம் செல்வோம் வருவாய்.

தெய்வானை தரு.

(பச்சைமா மலைபோல் மேனி என்ற வர்ணமெட்டு.)

வேட்டைக்கு சென்ற எந்தன்
வேந்தன் வரகாணேன் இன்னம்
ஏந்திழையாள் யானுமிங்கு
ஏங்கி புலம்பலானேன்
பாவி முனி நாரதனால்
பாவையாள் மையலில் சிக்கி
பார்வேந்தர் எங்குற்றாரோ
எங்கொடியாள் என்ன செய்வேன்
மாலை பொழுதாச்சே எந்தன்
மாரன் வரக்காணேன் இன்னம்
மாது நான் என்ன செய்வேன்
மனத்துயர் கொள்ளலானேன்

சுப்ரமணியர் வசனம்.

கண்மணி யான் வந்து விட்டேன் ஏன் புலம்புகின்றாய்.

தெய்வானை தரு.

(தோஷம் சொல்லாதே என்ற வர்ணமெட்டு.)

மன்னவா எங்கு சென்றீர் இந்த
மாது யார் இங்கொணர்ந்தீர்
சின்னம் சிறுவளாக இந்த
சிருக்கியை கொண்டு வந்தீர்

வள்ளி தரு.

யாரடி சிருக்கி என்றாய் அடி
அறிவு கெட்ட நாரியே அடி
கூரடி உன் பொவுஷை கொஞ்சம்
குதிக்காமல் பொருத்திருப்பாய்

தெய் நாரி பூரி என்றனை அடி
நவிலாதே சக்காளத்தி உன்
னாவை இழுத்து இங்கு அடி
நருக்கி விடுவேன் பாராய்

வள்ளி சக்காளத்தி என்றனே அடி
சதுராக பேச வேண்டாம் என்
சாமி என் கையைவிட்டு
சற்றே விலகி நிற்பாய்

தெய் சரணம் நான் செய்திடவோ அடி
சதிகாரி சண்டாளியே இனி
என் சரசன் கையை விட்டு நீ
சற்றே விலகி நிற்பாய்

வள்ளி பட்டி பதட்டமதாய் அடி
பலுக்காதே சட்டமதாய் அடி
எட்டி உதைப்பே னுன்னை
வெட்டி வார்த்தை பேசாதே

தெய் (ஆசைமிக வைத்தோயடி என்ற வர்ணமெட்டு.)
மிஞ்சி மிஞ்சி வந்தாயோடி அடி
மானங் கெட்ட சக்காளத்தி

வள்ளி கொஞ்சி கொஞ்சி வந்தாயோடி அடி
கேப்புமாரி சக்காளத்தி

தெய் பட்டத்தரசி யென்று அடி
பக்கத்தில் வந்தாயோடி

வள்ளி இந்த மொழி உனக்கு அடி
இன்னமும் சந்தேகமோ

தெய் மாப்பிள்ளை யாட்ட மென்று அடி
பக்கத்திலே வந்தாயோடி

வள்ளி தாருமாறுய் பேசா தோடி உன்னை
தவடையில் அரைவேனடி

தெய் கிட்ட கிட்ட வந்தாயோடி உன்னை
கன்னத்தி லரை வேனடி

வள்ளி சதிகாரி சக்காளத்தி
சட்டமாக பேச வேண்டாம்
சாந்தி செய்திடுவேன் சீ சீ சீ

தெய் கூட்டுமாரி குடிசெட்டி
கோபமிங்கு செல்லாதடி
கொற்றவரை விட்டுவிடு சீ சீ சீ

வள்ளி தட்டுவாணி தண்டுமாரி எட்ட நில்லடி
தெய் எச்ச இலைபொறுக்கி எட்ட நில்லடி

வள்ளி கட்டையால் அடிப்பேன்
தெய் மொரத்தால் மொத்துவேன்
வள்ளி யாரடி
தெய் உன்னடி

சுப்ரமணியர் தரு.

கோபம் கொள்ள வேண்டாம்
கொம்பனே மார்களே கொஞ்சம்
தயவு செய்தால் வம்பு என்ன

தெய்வானை தரு.

வம்பு இல்லை என்று
வனத்திற்கு சென்று நீ தையலை
இங்கனம் அழைத்து வந்தீர்

சுப்ரமணியர் தரு.

வம்பு என்ன இங்கு
வழக்கு தான் என்னடி
தெம்பா இருவரும் சேர்ந்து வாழ்ந்திடில்
சீரா இருந்திடலாகா தோடி

தெய்வானை தரு.

தெம்பு என்ன் இங்கு
தேவி இருக்கையில்
பாவி முனிவார்த்தை தட்டாமல் நீருமே
தையலை இங்கனம் அழைத்து வந்தீர்

சுப்ரமணியர் தரு.

குண்டுனி நாரதன் பேச்சை கேட்டே கெட்டேன்

தெய்வானை தரு.

பேச்சை கேட்டதாலே பங்கபடலானேன்

சுப்ரமணியர் தரு.

நானே கண்மணி

தெய்வானை தரு.

ஏனோ இம்மதி

சுப்ரமணியர் தரு.

குண்டுனி நாரதன் பேச்சை கேட்டாலே
கூசால் எந்தனை பேசலுற்றீர்

தெய்வானை தரு.

ஏனோ உமக்கிந்த வீணான வேலைகள்
வேதனை செய்யவோ வேலைய விட்டுநீ
விரைவினில் வந்துமே கலகம் செய்தீர்

நாரதர் தரு.

சரியல்ல சரியல்ல சமாதானம் செய்திடீர்
இருவரும் சேர்ந்துமே
சுகமாக வாழ்வீரே.

நாரதர் வசனம்.

சுப்ரமணியம் உன்னிட தர்பாருக்கு நான் வந்திருக்கும்போது கண்ட அதிசயங்களை நீ கேட்டபடியால் அல்லவா எடுத்துரைத்தேன் அதற்கு நீ சும்மா இராமல் அங்கனம் சென்று வள்ளியை மணமுடித்து கொண்டு என்மீதில் விசனமுற்றால் நான் என்ன செய்வேன் நீதியல்ல நான் சென்று வருகின்றேன்.

சுப்ரமணியர் வசனம்.

முனிவரே இவர் இருவரையும் ஒற்றுமையாக செய்துவிட்டு போய் விடும்.

நாரதர் வசனம்.

அம்மா குஞ்சரி அம்மா வள்ளி நாயகி நீங்கள் ஒருவருக்கு ஒருவர் ஒத்துமையாக இருந்து சுகமாக யிருங்கள் யான் சென்று வருகின்றேன்.

சுப்ரமணியர் வசனம்.

அப்படியே போவீர் நாரதரே.

மங்களம் தரு.

திங்களொடு கங்கைதனை சென்னிமிசை சூடியே
சங்கரன்மால் அருமுகனும் சதுர்முகனும் வாழ்கவே
மங்களமா மறையறிந்த யந்தணரும் வாழ்கவே
வாணரொடு மற்றுமுள்ள மன்னர்களும் வாழ்கவே
சந்ததமும் கந்தநாதன் கழலடி வாழ்கவே
இந்திரகுல மன்னர்சபை எங்கும் புகழ்ந்தோங்கவே
தாழைமடல் வாசமோங்கும் தங்கும் சிவகெங்கையாள்
தாசன் பேசி சுப்பருயல் தாரணியில் வாழ்கவே.

வள்ளி திருமணம்.

முற்று பெற்றது.

ஸ்ரீ சுப்பிரமணியவிலாசம் பிரஸ் மதறுஸ்.